விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 31 சனிக்கிழமை (16.08.2014) தொலைபேசி 222 3378,, 222 7829 ஒலி 240

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# போர்க் குற்ற செயல்கள் இடம்பெற்றிருக்கலாம்

## ஒப்புக்கொள்கிறார் ஹெகலிய

**(கொழும்பு)**
**நாட்டில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது போர்க்குற்றச் செயல்கள் இடம்பெற்றிருக்கலாம். அதற்கு வாய்ப்பு உண்டு என ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றிருக்க சாத்தியம் உண்டு.

3 இலட்சம் முதல் 4 இலட்சம் வரையிலான மக்களை மீட்டெடுத்த போது யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றிருக்க வாய்ப்பு உண்டு.

எனினும் மிகுந்த மனிதாபிமான நோக்குடன் அரசாங்கம் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மீட்புப் பணிகளில் ஈடுபட்டது.

சில தரப்பினர் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது குற்றச் செயல்கள் மட்டுமே இடம்பெற்றதாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

எந்த யுத்தமும் இன்பகரமானதாக அமையாது, எந்த விடயமும் 100

20 ஆம் பக்கம் பார்க்க....

## கைக்குண்டுகள் மீட்பு



(கொழும்பு)
வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்

20 ஆம் பக்கம் பார்க்க....

## கறுப்புப் பட்டியலிடப்பட்டவர்களின் பெயரை நீக்க விண்ணப்பிக்கலாம்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)
கறுப்புப் பட்டியலிடப்பட்டவர்கள் தங்களது பெயர்களை அதிலிருந்து நீக்கிக் கொள்ள விண்ணப்பிக்க முடியும் என இலங்கை அரசாங்கம அறிவித்துள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தனிப்பட்ட நபர்கள், நிறுவனங்களை அரசாங்கம் கறுப்புப்பட்டியலிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன தொடர்புடைய 16 அமைப்புக்களும், 424 தனிப்பட்ட நபர்களும் இவ்வாறு

19 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை-இந்திய கடற்படை அதிகாரிகள் புதுடில்லியில் சந்திப்பு

(புதுடில்லி)
இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் கடற்படைகளுக்கு இடையிலான நான்காவது கூட்டம் புதுடில்லியில் இடம்பெற்றுள்ளது.

புதுடில்லியில் கடந்த 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கை கடற்

20 ஆம் பக்கம் பார்க்க....

## மன்னார் மடுமாதா ஆவணித் திருவிழா

### 6 இலட்சம் மக்கள் பங்கேற்பு



மன்னார் மடுமாதாவின் ஆவணித் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் நாட்டின் பல பகுதி

19 ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரனின் குரு பிரித்தானியா-மகிந்த

(கொழும்பு)
மனித உரிமைகள் பற்றி பெரிதாகக் கதைத்துக் கொண்டிருக்கும் பிரித்தானியா, தான் செய்த மனித உரிமை மீறல்களை மறந்துவிட்டது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

வலப்பனை, கல்இந்திபெத்தே பகுதியில் அமைந்துள்ள கற்குகையொன்றுக்குள் சிங்களவர்கள் 16 பேரை உயிருடன் அடைத்து கற்

20 ஆம் பக்கம் பார்க்க....

## இலங். இராணுவ கருத்தரங்கில் இந்தியா பங்கேற்கக் கூடாது

### முற்றுகைப் போராட்டம் என சீமான் அறிவிப்பு

(சென்னை)
இலங்கையில் நடைபெறவுள்ள இராணுவக் கருத்தரங்கில் இந்தியா சார்பில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தி சென்னையில் உள்ள இலங்கை தூதரகம் அருகே நாளை 17-ம் திகதி முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இனவெறிக் கொடூரம் நிகழ்த்திய சிங்கள அரசு எதிர் வருகிற 18, 19, 20 ஆகிய திகதிகளில் இராணு

20 ஆம் பக்கம் பார்க்க....

## ஞானசார தேரருக்கு எதிராக அமைச்சர்கள் போர்க் கொடி

### அரசே காரணம் என்கிறார் அசாத் சாலி

(கொழும்பு)
அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளை அமைச்சர்கள் தற்போது சந்திக்கின்றமை பிக்கு எனும் போர்வைக்குள்இருந்து கொண்டு அரசாங்கத்தின் கைக்கூலியாகச் செயற்படும் ஞானசார தேரர் தொடர்பில் புகார் அளிப்பதற்கேயாகும் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கு விரோதமாக யாரே

19 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்தில் இணைந்த தமிழ்ப் பெண் மர்மமான முறையில் உயிரிழப்பு

### உடற் சுகவீனம் என இராணுவம் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் கிராமத்திலிருந்து இராணுவத்தில் இணைந்து கொண்ட பெண் ஒருவர் நேற்று முன்தினம் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

மேற்படி கிராமத்திலிருந்து கடந்த வைகாசி மாதம் 22-ம் திகதி பிரசாத் அஜந்தா என்ற பெண் இராணுவத்

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 7 எருமைமாடுகள் விபத்தில் உயிரிழப்பு



(கொழும்பு)

முல்லைத்தீவு, தட்டாமலை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 7 எருமைமாடுகள் உயிரிழந்துள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுங்கேணியிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்துக்கு சொந்தமான பிக்கப் ரக வாகனம் ஒன்று, வீதியில் கடந்து சென்று கொண்டிருந்த எருமைமாடுகளை மோதியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# ரணில் ஜனாதிபதியாக ஆட்சி பெற்றால் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவாரா?

## கேள்வியெழுப்பினார் அமைச்சர் மைத்திரிபால

(கொழும்பு)

தான் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாது ஒழிப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவர் உண்மையாகவே இதனை கூறுகின்றாரா என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன கேள்வியெழுப்பினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சக்கு வரக்கூடாது என்பதற்காக 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டு வந்தது.

இதற்காக தேர்தல் முறைமையையும் மாற்றியமைத்தது. ஆனால் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, தாம் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்போம்என்கிறார். இதனை அவர் உண்மையில் கூறுகினறாரா என தெரியவில்லை.

இதுபோன்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் எம் மீது பல பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். ஆனால் உண்மை எதுவென்பது மக்களுக்கு புரியும். மேலும் தற்போது ஊவா மாகாண சபை தேர்தல் நடைபெற உள்ளது. ஏனைய மாகாணங்களை போன்று ஊவா மாகாணத்திலும் அரசாங்கம் அமோக வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

தொடர்ந்து தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இத்தேர்தலில் எமது வெற்றியின் வளிம்பை கூட தொட முடியாதளவுக்கு தோலவியை தழுவும் என்பதில் சந்தேகமல்லை.

கடந்த கால யுத்தத்தின் போது மில்லியன் கணக்கான பணம் யுத்தத்திற்கு செலவிடப்பட்டது. தற்போது யுத்தம் முடிவடைந்து நாட்டின் அபிவிருத்தி பணிகள முன்னெடுக்கப்பட்டு வருவதோடு சுகாதாரம் பொருளாதாரம் மற்றும் கல்வித் தரங்கள் உயர்வடைந்துள்ளன.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரத்தில் பின்னடைவாக இருபதாக குற்றங்கள் சுமத்தப்பட்டன. ஆனால் இன்று பயங்கரவாதத்தை அழித்து பொருளாதாரத்தில் ஏனைய நாடுகளை விட முன்னிலையில் எமது நாடு உள்ளது.

நாடு முழுவதும் இரத்தவெள்ளம், பிரிவினைவாதம் என பயங்கரமான நிலையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். இவருடைய ஆட்சியில சகலவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைத்து நாட்டை அபிவிருத்தி பாதையில் கொண்டு சென்றுள்ளார். எனவே இந்த தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சியை விட எமது கட்சிக்கு அதிக பொறுப்பு இருப்பதால் இந்த தேர்தலில் ஆளும்கட்சி வெற்றிபெறும் என்றார் அமைச்சர் மைத்திரிபால. (செ-11)

# 60 கிலோ ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

கண்டியில் சுமார் அறுபது கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு சென்ற சந்தேகத்தின் பேரில் மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி, கட்டுகஸ்தோட்டையில் குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட போதைப் பொருளின சந்தைப் பெறுமதி இதுவரையில் மதிப்பீடு செய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரமபித்துள்ளனர். (செ-11)

# வாள்வெட்டுடன் தொடர்புடைய நால்வருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு மற்றும் சமூக விரோத செயற்பாடுகளுடன் தொடர்புடைய கும்பலொன்றைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்திய பின்னர் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மானிப்பாயை மையமாகக் கொண்டு இயங்கிவரும் இந்த குழுவைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களும் நேற்று முன்தினம் அதிகாலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாக பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார்.

சந்தேகத்திற்கிடமான சிலர் வாள்களுடன் நிற்பதை இதன்போது அவதானித்த பொலிஸார், மேலதிக பொலிஸாரின் உதவியுடன்நான்கு சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்கள் தப்பியோட முற்பட்டதை அடுத்து காலுக்கு கீழே துப்பாக்கிச் சூடு நடத்தி நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள், வாள்கள் உள்ளிட்ட ஆயுதங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களில் சிலர் தப்பியோடியதாகவும், அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டிருந்த ஆவா என்ற குழுவின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். (செ-11)

# கச்சதீவு செல்ல முயன்ற 50 பேர் கைது




(சென்னை)

இராமேஸ்வரத்தில் இருந்து கச்சதீவுக்கு இந்திய தேசிய கொடியுடன் பேரணியாக செல்ல முயன்ற 50 இற்கும் மேற்பட்ட பாரத மக்கள் கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தியர்களுக்கு கச்சதீவுப் பகுதியில் உள்ள பாரம்பரிய உரிமையை நிலைநாட்டும் விதமாக நேற்றையதினம் இந்தியாவின் 68-வது சுதந்திர தினத்தில் கச்சதீவு சென்று இந்திய தேசிய கொடியை ஏற்றுவதற்காக கோவையில் இருந்து பாரத மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர் அண்ணாத்துரை தலைமையில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் இராமேஸ்வரம வந்தனர்.

இராமேஸ்வரம் ரயில் நிலையத்தில் இருந்து பேரணியாக கடற்கரை நோக்கிச சென்றபோது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பேரணியை தடுத்துநிறுத்தியதுடன் அவர்களையும் கைது செய்தனர்.

மேலும் வேறுயாரும் படகு மூலம் கச்சதீவு சென்று விடாமல் தடுக்க துறை முகத்தில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். (செ-11)



சீசெல்ஸ் நாட்டின் சுகாதார அமைச்சர் திருமதி மிட்ஸி லோரா நேற்று முன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பில் அமைச்சருடன் கொழும்புக்கு வருகை தந்திருந்த அந்நாட்டின் சுகாதாரக் குழுவினரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

# இயங்க மறுத்த மோ.சைக்கிள் தீவைத்து எரிப்பு

(யாழ்ப்பாணம்)

இயங்கமறுத்த தனது மோட்டார் சைக்கிளை ஒருவர் வீதியில் வைத்து தீயிட்டு கொளுத்தியுள்ளார். இச்சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மதியம் மல்லாகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் மோட்டார் சைக்கிளில் மல்லாகம் சந்திக்கு அண்மையாக பயணித்துக் கொண்டிருந்தார். இடைவழியில் அந்த மோட்டார் சைக்கிள் இயங்காமல் வீதியில் நின்றுவிட்டது. அவர் சிறிது தூரம் மோட்டார் சைக்கிளை உருட்டி சென்றார்.

அப்போது மல்லாகம் சந்திக்கு அண்மையிலுள்ள மில் ஒழுங்கையில் குப்பைக்கு வைத்த தீ எரிந்து கொண்டிருநததை அவர் அவதானித்துள்ளார். அந்த இடத்தை நோக்கி தனது மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்ற அவர், எரிந்துகொண்டிருந்த குப்பைக்கு நடுவில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி அதைப் பற்றவைத்துள்ளார்.

இதனை அவதானித்த பொது மக்கள் மோட்டார் சைக்கிளில் பற்றிய தீயை அணைக்கமுயன்ற போதிலும் அது முடியாமல் போய் விட்டது.

இதனால் மோட்டார் சைக்கிள் முழுமையாக எரிந்து நாசமானது. இதுகுறித்து பொதுமக்கள் அந்த நபரிடம் கேட்டபோது, இந்த மோட்டார் சைக்கிளை ஓட வேண்டாம் என வீட்டிலும் ஏசுகின்றார்கள். மோட்டார் சைக்கிளும் ஒழுங்காக ஓடவில்லை அதனால்தான் தீயில் எரிய வைத்தேன் என்று தெரிவித்தார். (செ-11)

வாழ்த்துகிறோம்

நாளை 17-08-2014 நடைபெறவுள்ள தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் எவ்வித குழப்பமுமின்றி, தைரியத்துடன் சிறந்த பெறுபேறுகளை பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வெற்றிச் சிகரம் மாதிரி வினாத்தாள்

ஆசிரியர் : S.கணேசலிங்கம் மற்றும்
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் - கொழும்பு
தொ.பே : 077 6258778
(C-8205)



நல்லூர்க் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை



அனைத்து வகையான பூங்கன்றுகளும் அதிரடி விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்
யாழ் அக்குவரியம் அன்ட் பிளான்ற் பரடைஸ்
917, கட்டதெருச் சந்தி, யாழ்ப்பாணம். 021 5611 242
(7421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்தவினுடைய ஆரோக்கியத்துக்காக யாகம்!

## இந்திய குருக்களை கைது செய்யுமாறு மனு!

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆரோக்கியத்துக்காக யாகம் செய்ய இலங்கைக்கு சென்ற திருச்செந்தூர் கோயில் குருக்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இந்து மக்கள் கட்சியினர் இந்து அறநிலையத்துறை ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளனர்.

இந்து மக்கள் கட்சி சார்பில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து அறநிலையத்துறை கமிஷனர் அலுவலகத்தில் அளித்த புகார் மனுவில் இலட்சக்கணக்கான ஈழ தமிழர்களை கொன்ற இலங்கை அரசு மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதை தாங்க முடியாத இலங்கை அரசு கடந்த சில தினங்களுக்கு முன்பு தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது அவதூறு பரப்பும் வகையில் இலங்கை அரசின் இராணுவ இணையத்தளத்தில் வெளியிட்ட செய்தி ஒட்டுமொத்த தமிழர்களையும் கொந்தளிக்க செய்தது.

இந்நிலையில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குருக்கள் சிவசாமி தலைமையில் குழுவினர் இலங்கைக்கு சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உறவினரான திருக்குமரன் நடேசன் இல்லத்தில் ஆயுள் ஆரோக்கியத்துக்காக சிறப்பு யாகங்கள் செய்து வந்ததாக செய்திகள் வெளிவந்துள்ளது.

இலங்கைக்கு யாகம் நடத்த சென்று வந்த கோயில் குருக்கள் சிவசாமி மற்றும் அவருடன் சென்றவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மட்டுமின்றி கோயிலுக்குள் நுழைய அவர்களை அனுமதிக்க கூடாது. இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்து மக்கள் கட்சி மாநில செயலாளர் வீரமாணிக்கம் கூறுகையில், யாகம் நடத்த சென்ற கோயில் குருக்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கூறியுள்ளோம். நடவடிக்கை எடுக்காவிட்டால் அறநிலையத்துறை அமைச்சர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம் என்றார்.

இதுகுறித்து இந்து அறநிலையத்துறை ஆணையர் தனபாலிடம் கேட்டபோது அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார். (6)

# 13 வயதுச் சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது

(கரணவாய்)

யாழ். வரணி இடைக் குறிச்சி பகுதியில் 13 வயதுச் சிறுவன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மனோகரன் தனுராஜ் (வயது 13) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

வீட்டு வளவில் உள்ள மரம் ஒன்றில் தூக்கிட்ட இவரை மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அங்கு சென்ற போது அவர் உயிரிழந்துவிட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் மரண விசாரணை செய்து மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மரண விசாரணை அதிகாரிக்கு உத்தரவிட்டார். (6)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க மாநாயக்க தேரரிடம் கோரிக்கை

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழித்து விட்டு, புத்தசாசனத்தை அரசியல் மயத்தில் இருந்து மீட்க சங்க கட்டளை ஒன்றை பிறப் பிக்குமாறு மல்வத்து மாநாயக்க ரிடம் தேசிய புத்திஜீவிகள் சபை உறுப்பினர்களால் இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள் என பலதுறைகளை சேர்ந்த நபர்களை உள்ளடக்கிய தேசிய புத்திஜீவிகள் சபையின் உறுப்பினர்கள் சிலர், மல்வத்து மகாவிஹாரையில் மாநாயக்கரை நேற்று முன்தினம் சந்தித்தனர். இதன் போது இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

சகல பௌத்த பீடங்களையும் சேர்ந்த மாநாயக்க தேரர்களின் இணக்கத்துடன் இந்த சங்க கட்டளையை பிறப்பிக்குமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (6)

# ஒக்டோபர் மாதம் யாழ்தேவி வரும்

## யாழ். இந்தியத் தூதரக பதில் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி புகையிரதம் ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தை வந்தடையுமென யாழ். இந்திய பதில் துணைத்தூதர் தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

இந்தியாவின் 68 ஆவது சுதந்திர தினம் யாழ்ப்பாணத்திலுள்ள துணைத்தூதரகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத்தூதரகம் கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பரில் திறந்து வைக்கப்பட்டதிலிருந்து இவ்வருடம் நான்காவது தடவையாக இந்திய சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம்.

இந்திய அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கில் யுத்தத்திற்குப் பின்னர் உதவியும் ஆதரவும் தேவைப்பட்ட பல்லாயிரக்கணக்கானோருக்கு பலனளித்தன. அத்திட்டங்களில் சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக இந்திய வீட்டுத் திட்டம், விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதும் பல்லாயிரக்கணக்கானவருக்கு வேலைவாய்ப்பை வழங்கக் கூடியதுமான அச்சு வேலி கைத்தொழிற்பேட்டை, விரைவில் வேலைகள் நிறைவுறும் நிலையிலுள்ள வவுனியா வைத்தியசாலைக்கான 200 கட்டில்களுடைய கட்டடத் தொகுதி, புதிய திட்டங்களான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியற் பீடங்களை கிளிநொச்சியில் நிறுவுவதற்கான உதவித் திட்டம், துரையப்பா விளையாட்டரங்கின் புனரமைப்பு, யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையமொன்றைக் கட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவின் புதிய அரசும் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கான தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

யாழ்தேவி புகையிரதமானது ஒக்டோபர் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மடு மற்றும் தலை மன்னாருக்கிடையிலான சேவை டிசெம்பர் மாதத்தில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எம்மைப் பெருமை கொள்ள வைத்த இந்தியப் பொதுத்துறை நிறுவனமான இந்திய புகையிரதக் கட்டுமானக் கம்பனிக்கு எமது நன்றிகள் . இக்கம்பனியால் கட்டப்பட்ட வவுனியாவுக்கும் பளைக்குமிடையிலான புகையிரத தடத்திலான சீரான மற்றும் சொகுசான பிரயாணம் பற்றி கேள்விப்படும் போதெல்லாம் தடங்களின் சர்வதேசத் தரம் பற்றியும் எதிர்காலத்திலும் பயணிகளால் பாராட்டப்படத்தக்கதான தன்மைபற்றியும் எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. (6-4)

# குர்திஸ்தானிலிருந்து நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

ஈராக்கில் தன்னாட்சி அதிகாரம் உள்ள குர்திஸ்தானிலிருந்து வெளியேற முடியாத நிலையில் அந்நாட்டு இராணுவத்தின் நெருக்கடிகளுக்குள்ளானதாக கூறப்படும் இலங்கையர்களில் ஒரு தொகுதியினர் நாடு திரும்பியுள்ளார்கள்.

அந்நாட்டில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக அங்கு பணிபுரியும் இலங்கையர்கள் தற்போது நாடு திரும்புகின்ற போதிலும், ஒரு சில தொழில் வழங்குநர்கள் இராணுவத்தை பயன்படுத்தி அவர்கள் வெளியேற முடியாதவாறு தடைகளையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்துவதாக கூறுப்படுகின்றது.

குறிப்பாக குர்திஸ்தான் சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றிய இலங்கையர்களும் இது போன்ற நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில் அவர்களில் 39 பேர் வெளியேற முடியாதவாறு மறைவிடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களுக்கு அறிவித்திருந்தனர். இவர்களில் 10 பேர் தற்போது நாடு திரும்பியுள்ளார்கள். (6)

## இராசி பலன்

16.08.2014

(ஆடி 31, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

சஷ்டி பிற்பகல் 12.47 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 5.09 மணிவரை

இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

சுபநேரம் 3.05-4.35 மணிவரை

வளவன்

**மேடம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆலோசனையும் கிடைக்கும், திட்டமிட்ட காரியமொன்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைப்பளு கூடும்.

**இடபம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சுபகாரிய செலவுகள் கூடும், சயன சுகக் குறைவுண்டு.

**மிதுனம்:** இனிய தகவல்கள் இல்லம் தேடி வரலாம், எதிர்பார்த்த பண வரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கௌரவமான நாள்.

**கடகம்:** நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியமான நாள், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், சாமர்த்தியமாக பேசி சாதனை படைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

**கன்னி:** சஞ்சலங்கள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், மற்றவர்களின் மனஸ்தாபத்திற்கு ஆளாகாமல் பார்ப்பது நல்லது.

**துலாம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்:** பகைவர்கள் விலகுவர், செய்தொழில் மேன்மையுண்டு, சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உடன்பிறந்தவர்கள் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வாகன சுகமுண்டு, சுப செலவுகள் கூடும் நாள்.

**கும்பம்:** தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், உடன் பிறப்புக்களின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**மீனம்:** விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சேமிப்பில் ஈடுபாடு காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் சுமூகமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு.வே.கா.கணபதிப்பிள்ளை அவர்களின் மணிவிழாச் சிறப்பிதழ்



### பழகுதற்கு இனியர் பார்வைக்கு எளியர்

கல்வியே கண்ணெனப் போற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபராக நீண்ட காலமாக சேவையாற்றிய பெருமைக்கு உரிய திரு வே. கா. கணபதிப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெறும் நிலையில் மணி விழா நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. மனிதனை முழுமையடையச் செய்வது கல்வி. அக் கல்வியை வழங்குபவர்கள் கடவுளாக மதிக்கப்படுகிறார்கள். கல்வியைச் சிறப்பான முறையில் வழங்கும் ஆசிரியர்களை உருவாக்கி நீண்டகாலமாக கல்விக்காகப் பணியாற்றி வரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நீண்டகாலமாக தனது இனிமையான பேச்சு, எடுத்த விடயத்தை செவ்வனே செய்யும் செயற்திறன், அனைவரிடமும் இனிமையாக பழகும் சுபாவம் போன்ற பண்புகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் அதிபர் அவர்கள் அனைவருடைய நன்மதிப்பையும் பெற்றுள்ளார். ஓய்வுநிலை காலங்களிலும் சமூக, சமய பணிகள் ஆற்ற வாழ்த்துகின்றோம். இவருடைய பணியைப் பாராட்டி மணிவிழா எடுக்கும் ஆசிரியர்களையும் விழாக் குழுவிரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். தங்களுடைய பணிகள் தொடர எமது வாழ்த்துக்கள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இரண்டாவது குருமஹாசந்நிதானம், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.*



### சிறந்த வழிகாட்டி

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு வே.கா.கணபதிப்பிள்ளை தனது பூரணமான கல்விச் சேவையின் பயனாக பல ஆசிரியர்களை உருவாக்கி கலாசாலையைப் பெருமை அடையச் செய்தார். பின்னர் இவரது திறமையின் காரணமாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபராக 2005 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். இவரது சேவை கற்பித்தலில் மட்டும் அல்லாமல் கலாசாலையின் வளர்ச்சியிலும் பங்காற்றியது. கலாசாலைக்குத் தேவையான மனித, பௌதீக வளங்கள் தொடர்பாகத் துறைசார் அலுவலர்களுடன் கலந்துரையாடிக் கலாசாலையின் வளர்ச்சிக்கு விததிட்ட பெருமை இவரையே சாரும். அத்துடன் கலாசாலையின முறைசார் கலைத்திட்ட மற்றும் இணைக்கலைத் திட்ட நடவடிக்கைகளையும் முழுமையாக அமுல்படுத்தினார். இவரது சேவைகளின் பயனாக 2010 ஆம் ஆண்டில் இக்கலாசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டு திறம்பட சேவையாற்றினார். இவ்வாறான சேவைகளை வழங்கிய மணி விழா நாயகனை பாராட்டுவதுடன் நல்லதோர் சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கும் சிறந்த வழிகாட்டியாக திகழ வேண்டுமென்றும் எல்லா நலனும் பெற்று பல்லாண்டு காலம் வாழவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*சுந்தரம் அருமைநாயகம், அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண மாவட்டம்.*



### குறைந்த வளங்களுடன் நிறைந்த சேவை நல்கியவர்


சமூகத்திற்கு முன்மாதிரியான அருங்குணங்களைக் கொண்டவர்களாக ஆசிரியர்கள் திகழ வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும். ஆசிரியத்துவத்திற்குரிய அருங்குணங்களைப் கற்றுக் கொடுப்பதுடன் அத்தகைய முன்மாதிரிகளாகத் திகழ வேண்டிய பொறுப்பிலும் ஆசிரியப் பயிற்றுநர்கள் இருக்க வேண்டும் என்பது இங்கு குறிப்பிடாமலே வெளிப்படக் கூடிய உண்மை. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் திரு. வே.கா. கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பதவி வகித்த காலப்பகுதியில் (2009-2014) ஆயிரக்கணக்கான ஆசிரிய மாணவர்கள் வாண்மைத்துவம் சார்ந்த பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். குறைந்த வளங்களுடன் நிறைந்த சேவையை இச் சமூகத்திற்கு வழங்குவதில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. இதற்காக அதிபர் திரு.வே.கா. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய தலைமைத்துவத்திற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்*
*துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.*



கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாக பிரிவின் பிரதி கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய தருணத்தில் போருக்கு பின்னான சூழலில் முதல் முதலாக யாழ்ப்பாண பிரதேசத்துக்கு விஜயம் செய்த கல்வி அமைச்சின் உயர் மட்ட குழு உறுப்பினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குசென்றபோது அவரைக் கண்டேன். நாட்டின் பயிற்றப்படாத ஏழாயிரமளவிலான ஆசிரியர்களையும் ஆசிரிய உதவியாளர்களையும் குறித்த காலத்துக்குள் பல அணுகுமுறைகளை கையாண்டு பயிற்றுவிக்கும் பணியின் நிர்வாக வகிபாகம் எணக்குரியதாக இருந்த போது அதற்கு அனுசரணையாக நாட்டின் பல பகுதிகளில் சகோதர இன, மத ஆசிரியர்களை பயிற்றுவித்து நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஒத்துழைக்கும் நிறுவனமாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையை ஆரோக்கியமானதாக பரிணமிக்கச் செய்ய திரு.வே.கா. கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராக நியமனமான பின் ஆற்றிய பணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அதன்போது கல்வி அமைச்சின் எதிர்பார்க்கைகளைத் திருப்திகரமாகச் செயற்படுத்தும் வகையில் அவரது நிர்வாக நடவடிக்கைகள் அமைந்திருந்தமையைக் கண்டும் ஆசிரிய மாணவர்களுக்கு கோப்பாய் கலாசாலையின் தன்னடையாளமான கலாசார கட்டுமானத்துடன்விளைதிறன் மிக்கதும் வினைத்திறனுடையதுமான பயிற்சியை வழங்குதல் மீளுயிர்க்கப்பட்டமையைக் கண்டும் கல்வி அமைச்சு அவரைச் சிலாகித்தது. இத்தகைய திறன் பெற்ற செயல் வீரர் இன்று மணிவிழாக் காண்பதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ்.முரளிதரன், தமிழ்ப் பாடசாலைகள் பிரிவின் பணிப்பாளர், ஜனாதிபதி நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கல்வி அமைச்சு இசுறுபாய.



### திரு.வே.கா. கணபதிப்பிள்ளை (SLEAS-Class II) அவர்களின் வாழ்க்கைத் தடம்

**பிறப்பு: 17.08.1954, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**

**ஆரம்பக் கல்வி**

நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை
ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தியடைந்து இடைநிலைக்கல்வியை முதலில் வேலணை மகா வித்தியாலயம், பின்னர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
ஆசிரியர் நியமனம்: 07.03.1979 முதல்
ஆசிரியப் பயிற்சி 1981/82 பலாலி ஆசிரிய கலாசாலை (உடற்கல்வி விசேடம்) கல்வி மாணி B.Ed (NIE)

**கல்விச்சேவை:** ஆசிரிய பயிற்சியின் பின்னர் (10 வருடங்கள்) யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் உடற்கல்வித்துறை ஆசிரியராகவும் பின்னர் இலங்கை அதிபர் சேவை தரம் 3 இல் தெரிவாகி அக் கல்லூரியில் பகுதித் தலைவராக கடமைபுரிந்து 01.01.1991 தொடக்கம் பகுதிநேர அடிப்படையிலும் 01.09.1993 முதல் இணைப்பு அடிப்படையிலும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகவும் 2008 முதல் பிரதி அதிபராகவும் 2010 முதல் அதிபராகவும் கடமை புரிந்துள்ளார்.

**சமாதான நீதவான்:** 2012 முதல் அகில இலங்கை சமாதான நீதவான்

**திருமணம்:** 22.10.1983

**மனைவி:** மாணிக்கம் கமலாதேவி, சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி

**பிள்ளைகள்:** மகள்- நிலானி
தற்போது திரு ப.குலேந்திரன் பொறியியலாளரை திருமணம் செய்து அவுஸ்திரேலியாவில் வசிக்கின்றார்.
மகன்-பிறேமராகவன்
தற்போது சித்தமருத்துவத்துறை-உள்ளகப் பயிற்சி, கண்டி பல்லேகல வைத்தியசாலையில் கடமைபுரிகிறார்.

## மணிவிழா இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் இடம்பெறுகின்றது.





### எங்களின் அன்புத் தந்தை

அதிபர் திரு. வே.கா.கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றும் பாக்கியம் எமக்குக் கிடைத்தமை இறைவன் எமக்கு நல்கிய வரம் ஆகும். முகாமைத்துவத்தின் நுட்பங்களை உள்வாங்கி வெளிப்படைத் தன்மை மிக்கவராக எல்லோரையும் அரவணைப்பவராக அவர் விளங்குகிறார்.

விரிவுரையாளர் ஒவ்வொருவரது நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டார். சம்பள ஏற்றமாயினும் பதவி உயர்வு ஆயினும் மேலிடங்களோடு தொடர்பு கொண்டு அதற்குரிய பணிகளை இலகுவாக இடம்பெறச் செய்தார். இதனால் விரிவுரையாளர்கள் தாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு கருமத்திற்கும் அதிபருடைய ஆசியை பெறுவதை வழக்கமாகிக் கொண்டனர். ***Show Your Colours*** என்ற அவரது வாக்கு எமக்குக் கிடைக்கும் மிகப் பெரும் ஆசீர்வாதமாகும்.

அகவை அறுபது கண்டு பணியிலிருந்து இளைப்பாறுகை பெறுகிறார் என்கின்ற செய்தியை ஏற்பதற்கு எங்கள் மனம் மறுக்கிறது. அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும் தொடர்ந்து எமக்கான ஆற்றுப்படுத்தல் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

*வ.சி.குணசீலன், தலைவர், விரிவுரையாளர் கழகம், கோப்பாய், ஆசிரிய கலாசாலை.*



### நல்லாசிரியர்களது உருவாக்கத்திற்கு காரணமானவர்.

ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களுள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அளப்பரிய பங்களிப்பை நல்கி வருகின்றது. இந்நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சி பெற்றவர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வருகின்றனர். இந்த நிறுவனத்திற்குச் சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கிய திரு.வே.கா. கணபதிப்பிள்ளை அவர்கள் அகவை அறுபது எய்திச் சேவையில் இருந்து இளைப்பாறுகை பெறுகின்றார். அவரது பணிகளைக் கௌரவிக்கும் முகமாக கலாசாலை சமூகத்தினரும் நிறுவனத்தினரும் முன்னாள் ஆசிரிய மாணவர்களும் இணைந்து விழா எடுப்பது பாராட்டுக்குரியது. இலங்கையில் தமிழ் மொழி மூலமாக மறைக் கல்வி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிநெறியும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் உள்ளது. இக்கற்கைநெறி சிறப்பாக இடம்பெறுவதற்கு அதிபர் என்ற வகையில் திரு.வே.கா.கணபதிப்பிள்ளை அவர்கள் தன்னாலான பங்களிப்புக்களை வழங்கிய தன் வழியாக யாழ். திருச்சபைக்கும் அரும்பணியாற்றியுள்ளார். நல்லாசிரியர்களது உருவாக்கத்தை இறை சேவையாகக் கருதி செயற்படும் இவரை இறைவன் என்றும் ஆசீர்வதிப்பார்.

*உலகிற்கு நீங்கள் ஒளியாயிருக்கிறீர்கள்*
*உலகிற்கு நீங்கள் உப்பாயிருக்கிறீர்கள்.*

என்ற கிறிஸ்துவின் திருவாக்கிற்கேற்ப நலமானதைச் செய்வோர் பேறுபெற்றோர். திரு.வே.கா. கணபதிப்பிள்ளை அவர்களின் மணி விழா மாண்புறவும் அவரது ஓய்வுக் காலம் சிறப்படையவும் ஆசி கூறி வாழ்த்தி நிற்கின்றேன்.

**அதிவண. இ.தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். மறை மாவட்ட ஆயர்.**



### Message From the Chief Commissioner

It is a great pleasure to send a message as a token of appreciation to Mr.V.K. kanapathipillai who rendered precious service to Kopay Teachers' college.

As a physical training instructor he stepped into the college and was promoted to vice principal and later to the principal post during period of six years. He began to render his dedicated service to this college from 1992.His name surely has been carved in the history of Teachers' college as an efficient principal. Service to mankind is in his blood and his path was marked with humanity and human development. Eventually. I would like to appreciate his inestimable dedicated service as an efficient principal at Kopy Teachers' College. I wish him all the best for a happy and healthy life!.

***Col. L.M.D.Dharmasena***
***Chief Commissioner, Teacher Education Administration, Ministry of Education, Isurupaya, Battaramulla.***



### Message of Felicitation

I am Very please to send this message of felicitation to the diamond jubilee celebration to honour the yeoman service rendered by Mr.V.K.Kanapathipillai.

What an amazing personality.He has a pleasing apperance with a captivating smile that attracts anyone working with him. He led the Kopay Teachers' College as a leading institution.There is no Complaint or conflicts in Kopay Teachers College in his administration.

He absorbed many courses for the academic year 2012/2013 and 2013/2014 With the help of northern Provincial Education Department he is giving wonderful teacher training. I pray all mighty and bless his happiness, prosperity and long life on retirement. I thank the organizers for giving me this opportunity to send this message of felicitation.

***N.F.M.Harija,***
***Director of Education,***
***Teacher Education Administration, Ministry of Education, Isurupaya, Battaramulla.***



### எவரையும் நேசிக்கும் இதயம் கொண்டவர்

யாழ்ப்பாணத்தில் நீர்வளமும் நிலவளமும் செழித்தோங்கும் கோப்பாயில் அமைந்துள்ள கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை அவர்கள் எவரையும் நேசிக்கும் இதயம் கொண்ட நிர்வாகி என்கிற நான் கருதுகின்றேன். உலகில் பிறக்கும் ஒரு மனிதன் தனது சமூகத்திற்கு வழங்கும் சேவையைப் பொறுத்தே வரலாற்றில் பதிக்கப்படுகின்றான். அவ்வகையில் தன்னலமின்றிச் சேவையாற்றி இன்று ஓய்வு பெறும் நம் அதிபர் பெயரும் கலாசாலை வரலாற்றில் இடம்பெறும் என்பது திண்ணம். இவர் ஒரு சிறந்த நிர்வாகி மட்டுமல்ல வளமான சிந்தனையாளராகவும் விளங்குகின்றார். நேற்றைய சுவடுகள் நாளைய நம்பிக்கைகளாக மலரும். கலாசாலைக்கு ஆற்றிய நற்சேவைகளை உலகமே வியக்கும் வகையில் தம்மாலான சகல பணிகளையும் நிறைவாக மேற்கொண்டவர் ஓய்வுக்காலத்தில் மனநிறைவோடு வாழ சுற்றம் சூழ இனியவற்றை நுகர்ந்து இன்பமாய் வாழ நயினை நாகபூஷணித் தாயை பணிந்து நிற்கின்றேன்.

வீ.கருணலிங்கம், தலைவர், மணிவிழாக் குழு. (சி-8186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:

021 321 0815, 021 567 1532



இடமாற்றத்தை முன்னிட்டு

யாழ் மாநகரம் காணாத மிகமிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே







பட்டு சாறிகள்
ஸ்ரோன் சாறிகள்
சீகுன்ஸ் சாறிகள்
இந்தியன் ரொப்
சல்வார்கள்
சேட்
ஜீன்ஸ்

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருட்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9393

(7413)


## தொழில்நுட்ப மாற்று பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் கடலுணவு பதனிடல், Fibre Glass Based Products, காளான் வளர்ப்பு மற்றும் பொதியிடல், பாலிலிருந்தான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் (ஜோக்கட், பால் ரொபி) ஊதுபத்தி, சாதாரண மெழுகுவர்த்தி, மற்றும் அலங்கார மெழுகுவர்த்தி உற்பத்திகள் போன்ற தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சி நெறிகள் வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளர்கள் இலங்கை கைத் தொழில் அபிவிருத்தி சபை, மாவட்ட அலுவலகம், தேசிய வீடமைப்பு அதிகாரசபை கட்டடம், சுண்டுக் குளி யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் அல்லது 021 222 2421 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

1953 ஆம் ஆண்டு கர்த்தாலின் 61 ஆவது ஆண்டு நினைவு தின கலந்துரையாடல் சர்வதேச மார்க்சிச குழுவினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு டி.சி. எம். தனியார் கல்வி நிறுவனத்தில் சொ. சிவபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாட லில் இடது சாரி முற்போக்கு ஆர்வலர்கள் உரையாற்றவுள்ளனர். (6)


நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
SRI NAGAPOOSHANI AMMAN KOVIL



அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு (சுவாமிகாவும்) வாகனங்கள், ஏனைய உபகரணங்கள் என்பவற்றை நேர்த்தியாக வழங்க விரும்பும் அடியார்கள் கோவிலின் அறங்காவலர் சபையுடன் தொடர்பு கொண்டு கோவிலுக்கு அதிமுக்கியமாக தேவைப்படுவனவற்றை அறிந்து நேர்த்தியாக வழங்கி உச்சப் பயனைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு நிதி சேகரிப்பதற்கென - உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ தனிப்பட்ட எவருமோ அமைப்புக்களோ நியமிக்கப்படவில்லை என்பதால் - கோவிலுக்கு நிதி வழங்க விரும்புவோர் நேரடியாக கோவிலின் நிர்வாக அலுவலகத்தில் வழங்கலாம் அல்லது கோவிலின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்து விட்டு வங்கிப் பற்றுச் சீட்டினை பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன் என்ன காரணத்துக்கான நிதி பங்களிப்பு என்பதையும் அறியத்தர வேண்டும் என்பதை தயவன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

வங்கிக் கணக்கு விபரம்

க/கு இல .012426285-01
வர்த்தக வங்கி,
புறக்கோட்டை,
கொழும்பு 11

க/கு இல. 1060012330
வர்த்தக வங்கி,
ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

க/கு இல . 007687860
இலங்கை வங்கி,
ஊர்காவற்றுறை.

மேலதிக விபரங்கள் தேவை எனின் 0213213024/ 0213207785 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்

அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் (8201)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவை நிகழ்த்தும் பண்பாட்டுப் பெருவிழாவில் இலக்கியப் பணிக்காக இன்று (16.08.2014)

கலைப்பருதி

என்னும் விருதினைப் பெறும் பண்டிதர் வீ.பரந்தாமன் ஐயா அவர்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
பண்டிதர் பரந்தாமன்
க்வின்கலைக்கல்லூரி மாணவர்,
ஆசிரியர்கள்,இயக்குநர்கள்.

இல-09,2ஆம் குறுக்குத்தெரு,கனகபுரம்,
கிளிநொச்சி

7420


## UNIVERSIRY OF JAFFNA ,SRI LANKA

### FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE DISTANCE LEARNING UNIT -BBM ONLINE EXTERNAL DEGREE PROGRAMME

University of Jaffna will entertain applications upto 29.08.2014 from suitably qualified persons for the post of Tutor- Mentor (on contract)

**Qualifications:**

i. A degree from a recognized University in Management Studies or Commerce.

ii. Should have good command in English and Tamil

iii. Should have computer application skills in MS Office, Learning Management System, Internet & e-mail and typing skill in English and Tamil.

**Selection by Interview**

| POST | **SALARY** |
|---|---|
| Tutor-Mentor (on contract) | Rs.30,000/-(fixed) p.m. |

Applications for the above post shall be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x 10 c.m.in size.

Applicants from the University System/ Government Departments/ corparations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR.**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**14.08.2014**

(C-8204)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 52 செவ் 12 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: BSc (QS) / Quantity Surveyors (கட்டார்)
தொ.இ: B/1692

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: 33 ½ சூரி செவ் 11 இல்
உயரம்: 5’11"
தகைமை/தொழில்: A/L / Super Market (UK – PR)
தொ.இ: B/1699

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 27 ½
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: O/L, A/L / கடை (UK – Not PR)
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு PR உள்ள பெண்
தொ.இ: B/1701

பிறப்பு: 1962 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 31 ¼
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: A/L /முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: B/1705

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 28 ¾
உயரம்: 151 cm
தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்
தொ.இ: G/2538

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 47 ¾ செவ் 1 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: G/2539

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 32 சூரி செவ் 9 இல்
உயரம்: 5’3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/2541

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 91 ½ சூரி செவ் 8 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்: GAQ, BA – Following / கணனி உத்தியோகத்தர்
தொ.இ: G/2547

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இடங்களில் புகைத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்

பொது இடங்களில் புகையிலைசார் பொருட்களான சிகரெட், பீடி, சுரட்டு மற்றும் மதுபானம் சார் பொருட்களை பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே, பொது இடங்களில் புகை யிலைசார் மற்றும் மதுபானம்சார் பொருட்களை பயன்படுத்துபவர்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

பொது இடங்களில் புகையிலைசார் மற்றும் மதுபானம்சார் பொருட்களை பயன்படுத்துபவர்கள் இனம் காணப்படின் பொலிஸ் அதிகாரிகள் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்க கோருவதாக யாழ். மாவட்ட புகைத்தல் கட்டுப்பாட்டுக் குழுவின் 12 ஆம் திகதிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பகட்டமாக நல்லூர் உற்சவகாலத்தினை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் புகையிலை சார் மற்றும் மதுபானம் சார் பொருட்களை பயன்படுத்துபவர்கள் இனம் காணப்படின் உரியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவும் உள்ளது. (6)

## நடுவர் சங்கத்தின் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட நடுவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல்9 மணிக்கு யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் தலைவர் பா.முகுந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது என செயலாளர் ச.கருணானந்தன் அறிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டுக்குரிய அங்கத்துவமாக 100 ரூபா செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (6)

## வீடமைப்புக் கடனுக்கு விண்ணப்பிக்க முடியும்

நிரந்தர வருமானம் பெறும் அரச உத்தியோகத்தர்களுக்கான வீடமைப்புக் கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஒரு ஆள் பிணையாளருடன் இத் திட்டத்தின் கீழ் உயர்ந்த பட்சமாக தலா 5 இலட்சம் ரூபா வரையில் வீடமைப்புக் கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே இக் கடன் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்துடனோ அல்லது புதன்கிழமைகளில் தத்தமது பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்கும் எமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)


## பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி அனுதாபம்

(கொழும்பு)

ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் இடம்பெற்ற பயணிகள் விமான விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அனுதாபங்களை தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி ஹஸன் ருஹானிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுதாபங்களை தெரிவித்துள்ளார்.

ஈரான் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் குறிப்பாக துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பங்களுக்கும் அரசாங்கமும் இலங்கை மக்களும் என்னுடன் இணைந்து ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என பிரார்த்திக்கின்றோம் என அந்தக் கடிதத்தல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)



வடமாகாண பண்பாட்டு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தெய்வீக இசை அரங்கு நேற்று முன்தினம் நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்வு இடம்பெற்ற போது (படம்:-என்.குமார்)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 130 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 60 | 60 |
| போஞ்சி | 100 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 80 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 107


ராகுலன் பாலா

குறைகளோடு பொருட்களை கொடுப்பவன் தண்டனைக்குரியவன் என முடிவு செய்தால் தண்டிக்க வேண்டும் அந்த கடவுளையும்...!



டியேமவுலி ஏகாம்பரநாதன்

### வடை போச்சே...



டொறின் மன்மதநாயகம்



கழுதை 1: என் முதலாளி என்னை ரொம்ப அடிக்கிறார்ப்பா!

கழுதை 2 : நீ ஏன் அங்கே இருந்து ஓடக்கூடாது.

கழுதை 1 : அட போப்பா இங்க எதிர் காலம் ரொம்ப Bright ஆ இருக்கு...

கழுதை 2 :எப்படி எப்படி?

கழுதை 1 :என் முதலாளி அவரோட அழகான மகள் தப்பு பண்ணும் போது எல்லாம் "ஒரு கழுதைக்கு தான் உன்னை கட்டி கொடுக்க போறன்னு சொல்றார் அந்த நம்பிக்கையில் தான் இந்த கஸ்டத்தை எல்லாம் அனுபவிக்கிறேன்.

அசாத் நண்பன்

உண்ணும் உணவை வீண் செய்யாமல் இருப்பதே...



நாம் செய்யும் முதல் "அன்னதானம்"!!!

ஐது ஐது

டுபாய்



யாழ்ப்பாணம்



ஜனுஷன் ஜெயபாலசிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழாய்க்கிணறுகள் அமைத்து கொடுக்க மாகாணசபை உறுப்பினர் நடவடிக்கை

(பொறப்பதி)


யாழ். வடமராட்சி கிழக்கு போக்கறுப்பு ஜே/434 கிராமசேவையாளருக்குட்பட்ட நித்தியவெட்டை, வண்ணான் குளம், வேதக்குளம், போக் கறுப்பு, கேவில் ஆகிய கிராமங்களில் பலகுளங்கள், குடிநீர் கிணறுகள் என்பன முற்றாக தண்ணீர் வற்றி காணப்படுகின்றது.

இந்த கிராமத்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் விவசாயத்தையும் கால்நடை வளர்ப்புக்களையும் வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு குளங்கள், கிணறு களில் நீர் முற்றாக வற்றியுள்ளதால் விவசாய நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்படுவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை விட அங்குள்ள கால் நடைகளான ஆடு, மாடுகள் என்பன குடிப்பதற்கு நீரின்றி மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குவதாக அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தகவலை அறிந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினர் மதியழகன் மற்றும் சுகிர்தனின் செயலாளர் அ.சதிஸ் ஆகியோர் அந்தக் கிராமங்களுக்கு கடந்த 12 ஆம் திகதி சென்று சந்தித்து மக்களின் குறைகளை கேட்டறிந்ததோடு தண்ணீர் பிரச்சினையை சமாளிக்க இரண்டு குழாய்க் கிணறு களை ஓரிரு வாரங்களில் அமைத்து தருவ தாக உறுதியளித்தனர். (6-64)




## பதவியேற்பு நிகழ்வு

(மானிப்பாய்)

மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தின் 25 ஆவது பதவியேற்பு நிகழ்வு மானிப்பாய் பிரதேச கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.40 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக மாவட்ட லயன் உப ஆளுநர் வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் லயன் எஸ் முரளி தரனும் கௌரவ விருந்தி னராக லயன் ஈ.எஸ்.பி.நாகரட்ணம ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது நடப்பாண்டுக்கான புதிய தலைவராக லியோ அ.சுஜிந்தர் உள்ளிட்ட புதிய நிர்வாகம் பதவியேற்கவுள்ளது.

அத்துடன் கடந்த காலச் செயற்திட்டங்கள் அடங்கிய மலர் ஒன்றும் வெளியீட்டு வைக்கப்படவுள்ளதாகவும் 25 ஆவது பதவியேற்பினை முன்னிட்டு 25மக்கள் நலச் செயற்றிட்டங்களும் பதவியேற்பு நிகழ்வில் வைத்து இடம்பெறவுள்ளன.

மேலும் புதிதாக லியோக் கழகத்தில் இணைந்து கொண்ட வர்கள் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.(6-23)

# நீர் வழங்கும் அமைப்புக்கள் அனைத்தும் உள்ளூர் மன்றங்களில் பதிவது அவசியம்

வடக்கு மாகாணத்தில் கடும் வரட்சி நிலவுவதால் உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகங்கள, பொதுஅமைப்புகள் மற்றும் இராணுவத்தினர் நீர் வழங்கும் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு நீர் விநியோகத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் அமைப்புகள் யாவும் தங்களது விபரங்களை சேவையில் ஈடுபடும் பகுதிகளை உள்ளடக்கிய உள்ளூராட்சி மன்றங்களில் உடனடி யாகப் பதிவு செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் தற்போது நிலவும் வரட்சியை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுக்கும் விவசாயம், கமநல சேவைகள், கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன் கிழமை அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையா டலின் முடிவிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு நீர் வழங்கும் சேவையில் எத்தனை நிறுவனங்கள் ஈடுபடுகின்றன, எங்கு நீரை விநியோகிக்கின்றன, எத்தனை கிணறுகள் இத்தகைய சேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன, ஒரு கிணற்றிலிருந்து எத்தனை தடவைகள் நீர் இறைக்கப்படு கின்றது போன்ற புள்ளிவிபரங்கள் இது வரையில் இல்லாததால் நீர் விநியோகத்தை சரியான முறையில் ஒழுங்கு செய்யமுடியாமல் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய அமைச்சர், ஒரே கிணற்றை தொடர்ச்சியாக நீர் விநியோ கத்துக்குப் பயன்படுத்துவதால் இருக்கின்ற நன்னீரும் உவராக மாறுவதற்கான அபாயம் உள்ளதாகவும் குறிப்பிட்டார். இதனையடுத்தே நீர் வழங்கும் சேவையில் ஈடுபடும் அமைப்புகள் யாவும் உள்ளூராட்சிமன்றங்களில் தங்கள் பெயர் விபரங்களை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தற்போது மேற்கொண்டு வரும் நீர் வழங்கல் சேவையை மேலும் விரிவுபடுத்த விரும்பினால், மாகாண விவசாய அமைச்சினூடாக பவுசர்கள் மூலம் நீர் வழங்கும் ஏற்பாடு களைச் செய்து தரமுடியும் என அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்ததையடுத்து, பிரதேச சபைகள் இரண்டொரு தினங்களுக்குள்ளாகத் தங்கள் தேவைகள் தொடர்பாக உள்ளூராட்சித்திணைக்களத்தின் ஆணையாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றங்கள் நீர் விநியோகத்தைச் சீராக மேற்கொள்வதற்குத் தேவைப்படும் செலவு விபரங்களைப் பட்டியலிட்டு ஏற்க னவே உள்ளூராட்சி ஆணையாளரிடம் சமர்ப்பித்திருந்தனர். இந்தத் தொகையை அனர்த்த முகாமைத்துவப்பிரிவிடம் இருந்து பெறுவதற்குக் கோரிக்கை விடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் விவசாய அமைச்சின் செயலாளர் யு. எல். எம் ஹால்தீன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி. திருவாகரன், உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் எம். ஜெகூ, உள்ளூராட்சித் திணைக் களப் பிரதி ஆணையாளர் கொன்ஸ்ரன் ரைன் ஜக்சீல், சுற்றாடல் அதி கார சபையின் பிரதிப் பணிப்பாளர் விஜிதா சத்தியகுமார், விவசாய அமைச்சின் திட்ட மிடல் பணிப்பாளர் த. சர்வானந்தா ஆகியோரும் யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்ட உள்ளூராட்சிச்சபைகளின் தவிசாளர்களும் செயலாளர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். (6)



இந்தியாவின் 68 ஆவது சுதந்திரதினம் யாழ். இந்திய துணைத்தூதரத்தில் நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது. யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் பதில் துணைத்தூதுவர் எஸ்.டி.மூர்த்தி தேசிய கொடியை ஏற்றி வைப்பதையும் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

# இந்திய விசா வழங்குவதில் மோசடி இடம் பெறுகின்றது

## விழிப்புடன் இருக்குமாறு தூதரகம் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

இந்திய விசா வழங்குவது தொடர்பில் பொய்யான இணையத்தளமொன்று இயங்கு வதாகவும் இது குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என யாழ். இந்திய துணைத்தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்வில் யாழ் இந்தியத் துணைத் தூதரகம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒன்லைன் மூல இந்திய விசா விண்ணப்ப படிவம் எனும் தலைப்பையும் https://india- visa.co/index. php எனும் முகவரியையும உடைய இணையத்தளம் ஒன்று இயங்குவது பற்றி தூதரகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இத் தளமான இந்தியாவுக்கான சுற்றுலா, வணிக மற்றும் நீண்ட கால நுழைவுச்சீட்டு பெற்றுக் கொடுப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளதாக கூறுகின்றது. இந்த இணையத் தளம் பயனாளர்களை 55 பிரித்தானிய பவுண்கள் அல்லது 90 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு சமனான இந்திய ரூபாய்களை சேவைக்கட்டணமாக செலுத்துமாறு வேண்டுகின்றது.

இவ் இணையத்தளம் கோருவது தனது சேவைக் கட்டணமேயாகும் அத்துடன் நுழைவுச் சீட்டு பெறும் நிலையத்தில் செலுத்த வேண்டிய நுழைவுச் சீட்டுக் கட்டணத்தை பின்னர் செலுத்துமாறு கோருகிறது.

சில தீய சக்திகள் பொய்யான இந்த இணைய தளத்தை இந்திய அரசினது நுழைவுச்சீட்டை வழங்குவதற்கான அதிகாரபூர்வ ஒன்லைன் இணையத்தளத்தைப் போலவே உருவாக்கி மக்களை ஏமாற்றி வருகின்றன என்பதால் விண்ணப்பதாரிகள் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகின்றனர்.

அதிகாரமளிக்கப்பட்ட நுழைவுச்சீட்டு விண்ணப்பத்திற்கான இணையத்தளமானது http://www.indianvisaonline.gov.in எனும் இணையத்தள முகவரியை கொணடுள்ளது என மீளவும் வலியுறுத்தப் படுகின்றது.

விண்ணப்பதாரிகள் அதிகாரமளிக்கப்படாத எந்தவொரு இணையத்தளத்திற்கும் நுழைவுச்சீட்டு சேவைக்கான கட்டணங்களை செலுத்த வேண்டாம் என அறிவுறுத்தப் படுகின்றனர். அவ்வாறு செலுத்தப்படும் கட்டணங்களுக்கு தூதரகம் பொறுப்பாகமாட்டாது. என தெரிவிக்கபபட்டுள்ளது. (6-4)

## முதியோர் பேரவை உறுப்பினருக்கிடையில் போட்டி

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட பிரதேச பிரிவுகளில் உள்ள முதியோர் பேரவை உறுப்பினருக்கிடையே நடத்தப்பட்ட வினா விடைப் போட்டி அணமையில் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் முதலாம் இடத்தை சங்கானை பிரதேசப் பிரிவில் உள்ள முதியோர் பேரவையும், இரண்டாமிடத்தை தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள முதியோர் பேரவையும், மூன்றாமிடத்தை காரைநகர் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள முதியோர் பேரவையும் பெற்றுக்கொண்டன.

இப் போட்டியில் ஒவ் வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் 5 பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (6-134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

894


# ஆப்பைப் பிடுங்கிய குரங்கு!

...நகரத்தை அடுத்திருந்த ஒரு தோப்பில் வியாபாரி ஒருவன் கோவில் கட்டிக்கொண்டிருந்தான். அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களும் அவர்களுக்குத் தலைமையேற்றிருந்தவனும் உச்சிவேளையில் சாப்பிடுவதற்காக அருகிலிருந்த நகரத்துக்குப் போய் வருவது வழக்கம். ஒருநாள் தொழிலாளர்களும் மேஸ்திரியும் சாப்பிடச் சென்றிருந்த நேரத்தில் ஒரு குரங்குக் கூட்டம் அந்தக் கோயிலை அடைந்தது.

அங்கே பெரிய மரமொன்றைப் பிளந்து அதன் பக்கத்து உச்சியிலே வேல மரத்தினால் செய்து ஆப்பு ஒன்றை அடித்து வைத்திருந்தான் தச்சன். கோயில் கட்டிட வேலைகள் அப்போது முழுதும் பூர்த்தியாகாமல் பாதி அளவுக்கே முடிந்திருந்தன.

குரங்குகள் விருப்பம்போல் மரத்தின் உச்சி, மரத்தூள் குவியல்கள், வீட்டின் கூரைகள் ஆகியவற்றின் மீது ஏறி ஓடி ஆடி விளையாடத் தொடங்கின.

அப்பொழுது முடிவுகாலம் நெருங்கிய குரங்கு ஒன்று, பிளந்து வைக்கப்பட்டிருந்த மரத்தின் மீது ஏறி வேண்டாத இடத்தில் யார் இப்படி ஆப்பு அடித்திருக்கிறார்கள்? என்று சொல்லிக் கொண்டு அதைத் தன் கைகளால் அசைத்து அசைத்துப் பிடுங்கத் தொடங்கியது.



அது ஆப்பைப் பிடுங்கியதால் பிளவுபட்டிருந்த மரங்கள் ஒன்று சேர்ந்து கொண்டன. அப்போது மரத்தின் இடைவெளியில் இறங்கியிருந்த அதன் விரல்கள் நசுங்கி அந்தக் குரங்கு அந்த இடத்திலேயே இறந்துவிட்டது.

அதனால்தான் புத்திசாலிகள் அனாவசியமான விவகாரங்களில் தலையிடக்கூடாது என்று கூறுகிறேன். சிங்கம் சாப்பிட்டு மீது வைக்கும் உணவு நமக்கு எப்போதும் இருக்கவே இருக்கிறது. அது நமது தேவைக்குப் போதுமானதாய் இருக்கிறது. அப்படியிருக்கும்போது இந்தக் கவலையெல்லாம் நமக்கு எதற்கு? என்று கரடகன் சொல்லிற்று.

உணவை மட்டுமே பெரிதாக எண்ணி, அது கிடைத்தால் போதும் என்று திருப்தியடைந்துவிடக்கூடிய மன நிலையில் உள்ள நீ, உனக்குப் பெருமை தரக்கூடிய வேறு காரியங்களைச் செய்ய விரும்பாத நீ, எவ்வாறு உயர்வான காரியங்களைச் செய்வாய்? என்று கேட்டது தமனகன்.

நான் உயர்வான காரியங்களைச் செய்யவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும் என்று கரடகன் கேட்டது.

தெரிவதற்கு இதில் என்ன இருக்கிறது? வெளிப்படையாகச் சொன்ன வார்த்தையின் அர்த்தத்தை மிருகம்கூடப் புரிந்து கொள்ளும். குதிரைகளும் யானைகளும் தூண்டினால்தான் பாரத்தைச் சுமக்கின்றன. ஆனால், வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் புத்திசாலி, தன்னுடைய ஊகச்சக்தியால் பிறருடைய எண்ணங்களைத் தெளிவாக அறிந்து கொள்வான். இந்த இங்கிதம்கூட இல்லாவிட்டால் புத்தி இருந்து என்ன பயன்?

ஒருவரிடமிருந்து வெளிப்படும் முகக்குறி, அங்க அசைவு, நடை, செய்கை, பேச்சு ஆகியவற்றை வைத்து அவருடைய கண்களில், முகத்தில் ஏற்படும் மாறுதல்களைக் கொண்டும் ஒருவருடைய உள்ளத்தில் இருப்பதைப் பற்றிச் சுலபமாக அறிந்து கொள்ளலாம். ஆகையால் என் புத்திசாதுர்யத்தால் இன்றே நம் எஜமானரை வசப்படுத்தப் போகிறேன் என்றது தமனகன்.

உனக்கு ஊழியம் செய்யவே தெரியாதே! அப்படியிருக்கும்போது எஜமானரை எவ்வாறு உன்னால் வசப்படுத்த இயலும் என்றது கரடகன்.

ஊழியர்களுக்கான தர்மத்தைப் பற்றி வியாசமுனிவர் கூறியதெல்லாம் எனக்குத் தெரியுமே?

பலசாலிக்குப் பாரம் என்பது ஒரு பொருட்டே இல்லை. முயற்சி உடையவர்களுக்கு தூரம் என்பது ஒரு பெரிய விடயமே இல்லை. கல்வியாளர்களுக்கு அந்நிய நாடு என்ற ஒன்று இல்லை. அன்போடு பேசுபவர்களுக்கு அன்னியன் என ஒருவரும் இல்லை என்று யாராவது சொல்ல நீ கேட்டது இல்லயா? என்று இதற்குப் பதில் அளித்தது தமனகன்.

உன் தகுதிக்கு ஏற்ப நீ நடந்துகொள்ள வேண்டும். எஜமானர் ஒருவேளை உன்னை அவமதித்தாலும் அவமதிக்கலாம் என்றது கரடகன். நீ சொல்வதும் உண்மையே. ஆனால், சமய சந்தர்ப்பத்தை அறிந்து நான் நடந்து கொள்வேன்............................(தொடரும்)

08.2014
16

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1513 - கினெகேட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றி மன்னன் பிரெஞ்சுப் படைகளை வென்றான்.
- 1780 - தென் கரோலினாவில் காம்டன் என்ற இடத்தில பிரித்தானியப் படைகள் அமெரிக்கப் படைகளை வென்றனர்.
- 1819 - இங்கிலாந்து, மான்செஸ்டரில் அரசுக்கெதிராகக கிளர்ந்த கிளர்ச்சியாளர்கள் அடக்கப்பட்டதில் 11 பேர் கொல்லப்பட்டு 400 பேர் காயமடைந்தனர்.
- 1865 - 4 ஆண்டுகள் ஸ்பானியரின் பிடியிலிருந்த டொமினிக்கன் குடியரசு மீண்டும் விடுதலை பெற்றது.
- 1945 - ஜப்பானியப் பிரதமர் கண்டாரோ சுசுக்கி மீது கொலை முயாற்சி மேற்கொள்ளப்பட்டது.
- 1945 - சீனாவின் கடைசி மன்னன் பூயி சோவியத் படைகளினால் கைப்பற்றப்பட்டான்.
- 1964 - தென் வியட்நாமில் அமெரிக்காவின் ஆதரவுடன் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் டோங் வான் மின் பதவியகற்றப்பட்டார்.
- 1987 - அமெரிக்காவின் மிச்சிகனில் MD-82 பயணிகள் விமானம் விபத்துக்குள்ளாகியதில் 155 பேர் கொல்லப்பட்டனர். செசிலியா சீசான் என்ற 4-வயதுக் குழந்தை மட்டும் உயிர் பிழைத்தது.

### பிறப்புகள்

- 1821 - ஆர்தர் கெய்லி, கணிதவியலர் (இ. 1895)
- 1872 - அ. மாதவையா, தமிழ் முன்னோடி எழுத்தாளர் (இ. 1925)
- 1933 - தா. இராமலிங்கம், ஈழத்துக் கவிஞர் (இ. 2008)

### இறப்புகள்

- 1705 - ஜேக்கப் பெர்னூலி, சுவிட்சர்லாந்து கணிதவியலாளர், அறிவியலாளர் (பி. 1654)
- 1886 - ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், (பி. 1836)
- 1971 - இ. மு. வி. நாகநாதன், இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர், (பி. 1906)
- 1977 - எல்விஸ் பிறீஸ்லி, அமெரிக்கப் பாடகர், நடிகர் (பி. 1935)
- 2003 - இடி அமீன், உகாண்டா சர்வாதிகாரி (பி. 1924)



இடி அமீன்

இடி அமீன் (Idi Amin Dada, 1924 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 திகதி பிறந்தார். இவர் உலகின் அதிபயங்கர கொடுங்கோலர்களில் ஒருவர். 1971 முதல் 1979 வரை உகாண்டாவை ஆட்சி செய்தார.

இவரது ஆட்சி பற்றிய விபரங்கள் பல பயங்கரமானவை ஆகும். 1979 இல் உகண்டாவை விட்டுத் தப்பியோடி சவுதி அரேபியாவில் தஞ்சமடைந்தார். 2003 இல் அங்கேயே இறந்தார்.

உகாண்டா நாட்டில் 1971 ஆம் ஆண்டில் இராணுவ புரட்சி மூலம் ஆட்சியை பிடித்தவர் இடி அமீன். சர்வாதிகார ஆட்சி நடத்தினார். உகாண்டா தான்சானியா போருக்கு பிறகு, 1979 ஆம் ஆண்டு லிபியாவுக்கு தப்பி சென்றார். அங்கிருந்து 1981 ஆம் ஆண்டு சவுதி அரேபியா சென்றார். 2003 ஆம் ஆண்டு இறந்தார். சர்வாதிகாரி இடிஅமீன் நாட்டை விட்டு பாதுகாப்பாக வெளியேற அப்போது வசதி செய்து கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"





...ஆட்டம் முடிவடைய இன்னும் இரண்டரை மணி நேரம்தான் பாக்கி, மீதம் கைவசமுள்ள விக்கெட்டுக்களோ 4 மட்டுமே. ஜெயிப்பது என்பது இயலாத காரியம். ஆனால், அவுட் ஆகாமல் மீதம் உள்ள நேரம் ஆடினால் போட்டியை டிரா செய்து விடலாம். சச்சினும் பிரபாகரும் இந்த இக்கட்டான நிலைமையை உணர்ந்தே இருந்தனர். காரணம் இவர்களுக்குப் பிறகு கிரண் மூரே மற்றும் ஹிர்வானி மட்டுமே பாக்கி. இருவரும் ரன் எடுப்பார்கள் என உத்தரவாதம் இல்லாத நிலையில் அணியின் தலைவிதி இவர்களை நம்பித்தான் இருந்தது. ஃப்ரேசர், ஹெம்மிங்ஸ் மற்றும் மால்கம் ஆகியோர் இரண்டாவது வெற்றிக் கனியைச் சுவைக்க பந்து வீசிக்கொண்டிருந்தனர். எனவே, ஒவ்வொரு பந்தையும் நிதானமுடன் விளையாடினர். சச்சின் நுறு பந்துகளில் 50 ரன்கள் எடுத்து தனது அரை சதத்தை எட்டினான். அதிரடி ஆட்டம் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே கைகொடுக்கும். இதுபோன்ற ஐந்து நாள் டெஸ்ட் போட்டிகளில் ஒன்று ரன் குவிக்க வேண்டும். அது முடியாத பட்சத்தில் ஆட்ட நேர இறுதிவரை விக்கெட்டுக்களைக் காப்பாற்றிக் கொண்டு நிதானமுடன் ஆடவேண்டும். கடைசி 20 ஓவர்கள் இருக்கும்போது ஸ்கோர் 6 விக்கெட் இழப்பிற்கு 255 ரன்கள்.



விக்கெட்டுக்களைக் காப்பாற்றிக் கொண்டு சச்சினும் பிரபாகரும் ஒவ்வொரு ரன்னாக கண்ணுக்கு தெரியாமல் சேர்த்துக்கொண்டிருந்தனர். இருவரில் ஒருவரை அவுட் ஆக்கினால் போதும் டெஸ்டை வென்று விடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த இங்கிலாந்து அணியினர் ஆட்ட நேரம் முடிவை நெருங்க நெருங்க டென்ஷனாகிக் கொண்டிருந்தனர். சச்சின் எடுத்த ரன்களும் 90 ஐ எட்டியது. அதுவரை ஒன்று ஒன்றாக ரன் எடுத்துக் கொண்டிருந்த சச்சின் கொஞ்சம் தளர்ந்து போன ஃப்ரேசர்

## உருவம் கண்டு எள்ளாமை வேண்டும்!

வீசிய பந்தை ஃபோருக்கு அடித்து விரட்டினான். பின்பு இரண்டு, பின்னர் ஒரு ரன். இப்போது சச்சின் ஸ்கோர் என்ன தெரியுமா 97.

நியூசிலாந்தில் நடைபெற்ற போட்டியில் 88 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது சச்சின் நினைவுக்கு வந்தது. கொஞ்சம் அவசரப்பட்டதால் அப்போது செஞ்சுரி அடித்து செய்திருக்க வேண்டிய சாதனை கைநழுவிப் போனதை அவன் மறக்கவில்லை. அதே தவறை மீண்டும் செய்யக்கூடாது என்பதில் இம்முறை உறுதி காட்டினான். முதல் செஞ்சுரிக்கு இன்னும் மூன்று ரன்கள் மட்டுமே தேவை. மிகப்பெரிய சாதனை கை அருகே இருக்கிறது.

பழம் நழுவிப் பாலில் விழுந்து அது நழுவி வாயில் விழும் நேரத்தில் அவசரப்பட்டதால் கீழே விழுந்த கதை மீண்டும் அரங்கேறக்கூடாது என்ற உறுதியுடன் மிகக் கவனமாக ஃப்ரேசர் வீசிய பந்தை ஒரு ரன்னுக்குத் தட்டி விட்டான். பின்னர் அவனது முறை வந்ததும் வேகமாக அதை அடிக்க அதில் சேர்ந்தது மூன்று ரன்கள். ஆக சச்சின் தனது ஸ்கோரை 101 ரன்னுக்கு உயர்த்தி தனது முதல் செஞ்சுரியை இங்கிலாந்து மண்ணில் பதிவு செய்தான். அப்போது அவன் வயது 17 ஆண்டுகள் 112 நாட்கள்.

**கே. ரமேஷ்**

(தொடரும்)

**ஆட்ட நாயகன் விருது சச்சினுக்கு வழங்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற கொண்டாட்டங்களில் மேல்நாட்டு வழக்கப்படி அனைவரும் குடிப்பதற்கு ஷாம்பைன் வழங்கப்பட்டது. சச்சினின் வயதோ 17 தான். சச்சின் நெளிந்து கொண்டே சார் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் சட்டப்படி குடிக்க உரிமை. எனக்கு 17 வயதுதான் ஆகிறது என்றானாம்!**

# உங்கள் பிறந்த எண் 09 இல் கூட்டெண் 02 இன் பலன்கள்



### தோற்றம்

**67**

செவ்வாயுடன் சந்திரன் சேர்ந்த ஆதிக்கப் பலன். இவர்கள் சராசரி உயரம் அமையப் பெற்றவர்கள். முடி அடர்ந்து இருக்கும். கண்கள் அகலமாக அழகாக இருக்கும். சிவப்பாக இருப்பர். கன்னங்கள் பருமனாக இருக்கும். மூக்கு மேலிருந்து கீழே நீண்டு சிறிது மேலே தூக்கினாற்போல உள்ளதாகும். வாய் சிறிது பெரிதாக கொஞ்சம் சதை பிடித்த உதடுகளுடனிருக்கும். அழகாக விரைந்து செயற்படுபவராக சுறுசுறுப்புடன் இருப்பர். கவர்ச்சியானவர்.

### குணம்

நல்ல பேச்சுத்திறமை கற்பனை வளத்துடன் இருக்கும். எதையும் தர்க்கம் செய்தே ஒப்புக்கொள்வர். தெய்வ பக்தி, இரக்கம் உண்டு. பொய் நிறையச் சொல்லுவார். தந்திரமாகவும் நடப்பர். இவர்கள் பார்க்க அமைதியானவர். பேசப் புதுமையானவர். சண்டை சச்சரவில் பயங்கரமானவர். குறும்புகள் செய்வர். பலமில்லாத பக்கமிருந்து எதிர்வாதமிடுவர். பிறர் மனத்தை நன்கு எடை போட்டறிவர். இவர்க்ளைச் சரியாக அறிய முடியாது. ஏனெனில் க்ஷணச் சித்தம் க்ஷணப் பித்தம் என நிலை மாறிக் கொண்டே இருப்பர். சஞ்சலம், சபலம் இவர் மனப்போக்கு ஆகும்.

துணிவு இருக்கும். பயமும் வரும். மனோ வேகம் அதிகம். கேள்வி பதில் இரண்டையும் இவர்களே கற்பனை செய்துகொண்டு விடுவர். தம் எண்ணம், கருத்து, பேச்சு, செயல் எல்லாம் சரியே எனப் பிடிவாதம் பிடிப்பர். ஆனாலும் தம்மைத் தாமே மனத்தில் எடை போட்டு தம் தவறுகளை உணர்வர். வருந்துவர். தூயமனிதராகவும் முடியும்.

தெய்வ பக்தி உண்டு. கூடவே, மூட நம்பிக்கையும் இருக்கும். தம்மைச் சார்ந்த மதம், மனிதர், மொழி, தத்துவ வழி எனப் பலவற்றிலும் குடும்பத்திலும் பற்றோடிருப்பர். நகைச் சுவை உணர்வு மிக்கவர். நண்பர்களை விரும்பிச் சேர்ந்து கூத்தடிப்பர். கூச்சம், வெட்கம் இவர்களிடம் இருக்காது. உடலாலும், பொருளாலும் சிபாரிசு செய்வதாலும் மற்றவர்க்கு உதவுவர். தாவர தோட்ட அறிவிலும் நாட்டம் உண்டாகும். பல திறமைகள் இருக்கும். பிரபலம் புகழ் ஏற்படும். கலைத்திறமை பாட, கவிபுனைய இருக்கும். சிலர் நடனமாடுவர். ஒப்பனைத் திறனும், வீட்டை அலங்கரித்தல் முதலியவற்றில் நாட்டமும் இருக்கும். மனிதரை மாற்றி அமைக்கும் ஆற்றலும் வரும்.

### குடும்பம்

பிறந்த குடும்பத்தில் செல்லமாக வளருவர். படிப்பு, அனுபவம் கல்வி இரண்டில் ஒன்று நன்கு அமையும். காதலுணர்வு எழும். ஆனாலும், திருமணம் நடப்பது சிரமம். நடந்தாலும் கூடி வாழ மாட்டார். சச்சரவில் பிரிவர். குடும்ப நிர்வாகமும் குடும்பத்தில் எப்படி பேசுவது? எப்படி நடந்து கொள்ளுவது என இவர்கள் அறியார். ஈடுபட்ட சங்கதியில் மனதை ஆழ்ந்து செலுத்திவிடுவர். ஆகவே, குடும்ப வாழ்க்கை அமைதியாக இருக்காது. பொது வாழ்க்கைக்கும் பொது சேவைக்கும் ஆன்மிக வழி செல்லவும் இவ்வெண் ஏற்றது. இவர்களுக்குப் பொதுவாக ஆயுள் குறைவு என்பதால் இவர் மனைவி விதவையாகலாம். வாழாவெட்டி ஆகலாம். பெண்களானால் மரணத்தாலோ, விவாகரத்தாலோ கணவனைப் பிரிவர்.

### தொழில்

இவர்கள் மனம் சக்தி வாய்ந்ததாகையினால் பல தொழில்களும், அத்துப்படியாகும். கலைகளில் சிறந்து விளங்குவர். நடனம், நடிப்பு, பாட்டு, கதை, கவிதை, கட்டுரை, ஓவியம் எல்லாம் நன்கு வரும். இவற்றில் சிறந்து விளங்கிடலாம்.

ரியல் எஸ்டேட், சிவில் என்ஜினியரிங், புகைப்படமெடுத்தல், எரிபொருள், எண்ணெய், குடிநீர் சம்பந்தப்பட்ட வியாபாரம், மதுக்கடை நடத்தலாம்.

செடி, மரம், காய், கனி என்று ஆராய்ச்சி விஞ்ஞானியாகலாம். ரசாயனத் தொழிலும் நன்கு வரும். கணக்கியலில், ஜோதிடத்தில் முன்னேற்றலாம்.

பேராசிரியராகலாம். பெரிய நடிகராகலாம். மருத்துவராகலாம். மனோசக்தி வல்லுநராக, மன மருத்துவராக, மனோ சாத்திர நூலெமுதுபராக விளங்கலாம்.கால்நடைபண்ணை, விவசாயப் பண்ணை வைக்கலாம். சினிமாத் தொழில், பொம்மலாட்டக்கலை, சட்ட ஆலோசகர் பதவி, மண் தொழில் எல்லாம் நன்று.

மற்றும் பொலிஸ், இராணுவம் போன்ற துறைகளில் உளவாளிகளாக, புகைப்படம், வீடியோ, ஆடியோ நிபுணராக இருக்கலாம். வீடியோ கடை நடத்தலாம். அரசியலில் ராஜதந்திரிகளாகப் புகழ் பெறலாம். எத்தொழிலிலும் இவர்களுக்குப் பகை உண்டு.

### நோய்

இவர்கள் பரபரப்பாக இயங்குகிறவர். ஆக விபத்துக்கள் ஏற்படலாம். வம்பு தும்பில் அடிவிழுந்த காயமேற்படலாம். கண், அறுவைச்சிகிச்சை நடக்கலாம். வயிற்று வலி வரும். அப்பெண்டிசிடிஸ், ஹைட்ரோசில் ஏற்படும். சிறுநீரகத்தில் கல் உண்டாகும். பி.பி கட்டிகள் ஏற்படும். நீரிழிவு நோய், மனக் கோளாறு, ஜலதோஷத் தொடர்பான நோய்கள் உண்டாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -14

## வரட்சியின் தாண்டவத்தை முன்கூட்டியே தெரிந்து கொள்ளும் தொழில்நுட்பம் அவசியம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XIII

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

காலநிலை மாற்றத்தின் தாக்கம் பரந்துபட்ட அளவில் உலகளாவிய ரீதியில் உலர்வலய பிரதேசங்களில் இம்முறை வரட்சியின் வெளிக்கொள்ளலாக வெளிக்கொணரப்பட்டிக்கின்றது. அதே நேரம் ஈரவலயத்தில் மழை வெள்ளக்காடாகி அங்கும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றது.

காலநிலை மாற்றம் வெவ்வேறு இடங்களில் எதிர்மறையான தாக்கத்தை இத்தீவினிலேயே கொண்டுவந்திருப்பதை அவதானிக்கலாம். இதனை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பது பலருடைய வினாவாக இருக்கின்றது.

வளர்ந்து வரும் விஞ்ஞானத்தினை இதற்கு நாம் முறையாக பயன்படுத்திக்கொண்டால் இவ்வாறான தாக்கங்களிலிருந்து எமது மக்களையும் விவசாயத்தையும் நாம் காப்பாற்றிக்கொள்ளலாம். இதற்கான அணுகுமுறைகள் வெளிநாடுகளில் சிறப்பாக கடைப்பிடிக்கப்படுகின்றன.

பல இயற்கையின் இடர்களிலிருந்து மக்களை காப்பாற்ற விஞ்ஞான தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

துல்லியமாக வானிலை ஆராயப்பட்டு அதன் மூலம் இயற்கையின் சீற்றத்தை முன்கூட்டியே அனுமானிக்கும் செயன்முறை வடபகுதிக்கு வேண்டும். காலநி லையை தவிர்த்து அது சார்ந்த ஆய்வுகளை எவ்வழியிலும் முன்னெடுக்க முடியாது.

அவ்வாறாயின் காலநிலை பற்றி குறிப்பாக வளிமண்டல வெப்பநிலை, ஈரப்பதன், காற்று வீச்சு, மற்றும் கதிர்வீச்சு என பலவற்றையும் அறிந்து கொண்டால் அந்த தரவுகளை வைத்து முன்னைய காலங்களில் பெறப்பட்ட தரவுகளுடன் ஒப்பிட்டு வடபகுதியின் காலநிலையை எதிர்வுகூறுவதன் மூலம் மக்களையும் திட்டமிடல் மற்றும் நலத்திட்டங்களை செய்பவர்களை தயார்ப்படுத்திக்கொள்ள வழிபிறக்கும். இயற்கையின் சீற்றத்தை நாம் கணிக்கும் வழிகள் பல உண்டு.

இது சார்ந்து பல புலமையாளர்களை உள்வாங்கவும் இன்னும் உருவாக்கவும் முடியும். எமது பிரதேசம் வரண்ட வலயமாக இருப்பதாலும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் பாரியளவில் உணரப்படும் பிரதேசமாக இருப்பதாலும் காலநிலை பற்றிய ஆய்வு மையம் வடமாகாணத்தில் அவசியம் அமையப்பெற வேண்டும்.

இதற்காக கிளிநொச்சி அறிவியல் நகரில் விவசாய பீடத்தில் கற்றலினூடாக இதனை முன்னெடுக்க வழிசெய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டிலுள்ள எமது புலம்பெயர்ந்த புலமையாளர்களையும் இதில் ஈடுபடுத்திக்கொள்ளலாம்.


மண்ணியல் பேராசான் ஜோசுவாவின் கருத்துப்படி வடபகுதியில் உணரப்பட்டிருக்கும் வரட்சி தொடர்ச்சயாக குறிப்பிட்ட காலத்திற்கு வந்து போகின்ற நிகழ்வாகவே இருந்துள்ளது. ஆனால் இம்முறை இதனது ஆதிக்கமும்தாக்கமும் அதிகமாக உணரப்பட்டிருக்கின்றது.

இதனை நாம் முன்கூட்டியே எதிர்வுகொண்டு அதற்கான மாற்று வழிகளையும் மக்களையும் தயார்ப்படுத்தியிருக்க முடியும்.

இதனை நாம் செய்யாது விட்டிருக்கின்றோம் என்றே கருதவேண்டும். பல விற்பன்னர்களைக் கொண்ட பிரதேசத்தில் இதுபற்றி ஆய்வு செய்யாததும் இதுபற்றி ஆய்வர ங்குகள் நடைபெறாததும் எமது கையாலாகாத்தனமாகவே எண்ண வேண்டும்.

அறிவியல் யுகம் விசாலமாகிக் கொண்டு போகும் போது நாம் அதனை தகுந்த தேவைக்காக பயன்படுத்தாது இருப்பது எமது கையறு நிலையேயொழிய வேறெதுவுமில்லை.

மாணவர்களை காலநிலை கற்றல் நோக்கி ஊக்கப்படுத்தி அதனது பயனை நாம் அடைய வேண்டும். இந்தியாவில் டேறாடன் இல் இருக்கும் வானிலை ஆய்வு மையம் இதற்கான பயிற்சிகளை வழங்குகின்றது.



மாதிரி காலநிலை ஆய்வு மையம்

இந்திய அரசாங்கத்தினது சிறப்பு உதவியாக குறுகிய பயிற்சிகள் பல இவ்வாறான அறிவினை விருத்தி செய்ய வருடாவருடம் அறிவிக்கப்பட்டும் எம்மவர்கள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க முயற்சிக்கவில்லை. அல்லது இதுபற்றிய தூரநோக்கில்லையா?

வானிலை ஆய்வினை மேலும் விருத்திசெய்தால் எமக்கு நிறையவே பலனுண்டு. அதனை நாம் முழுமையாக பயன்படுத்த சிந்திக்கவும் செயலாற்றவும் வேண்டும். வாருங்கள் முயற்சிசெய்வோம்.

எமக்கான அறியை நாமாகத்தான் தேடிப்பெறவேண்டுமே தவிர இன்னொருவர் கொண்டு வந்து தரமாட்டார். அறிவியல் யுகத்தின் நனமைகளை தேடியெடுத்து நாம் பயன்படுத்தத் தொடங்கினால் எமக்கான இயற்கையின் இடரை நாம் சமாளித்துக்கொள்ள முடிவதோடு எமது மக்களையும் விவசாயத்தையும் ஏனைய தொழி ற்றுறைகளையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

வானியல் ஆய்வு விசாலமாக்கப்படவேண்டும். வடபகுதியின் வானியல் கள நிலைமைகளை ஆய்வுக்குட்படுத்தி விவசாய செய்கையிலீடுபடுபவர்களை வழிநடத்த வேண்டும். வழிநடத்தும் பொறுப்பு ஆய்வு மையங்களுக்கு உண்டு. அதனை அனைவரும் இணைந்த செயற்பாடாக முன்னெடுக்கலாம்.

# விஹாரை காணிகளை அரசாங்கம் வெளிநாட்டவருக்கு விற்றுவருகிறது

## விக்கிரமபாகு கருணாரத்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசானது தமிழ் - முஸ்லிம் மக்களின் பூர்வீக காணிகளை விற்று எவ்வாறு வெளிநாட்டு நிறுவனங்களை நிறுவி வருகின்றதோ அவ்வாறே பௌத்த விஹாரைகளை அப்புறப்படுத்தி அதற்கு சொந்தமான காணிகளையும் கைப்பற்றி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க முயற்சித்து வருவதாக தெஹிவளை, கல்கிசை மாநகர சபை உறுப்பினரும் நவசமசமாஜ கட்சியின் தலைவருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

நவசமசமாஜ கட்சியின் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசானது வடகிழக்கில் எவ்வாறு தமிழர்களின் பூர்வீக காணிகளை சுவீகரித்து இராணுவ தேவைக்கு பயன்படுத்தி வருகின்றதோ அவ்வாறே இன்று பௌத்த விஹாரைகளையும் கைப்பற்றி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாரைவார்க்க முயற்சிக்கின்றது. மறுபுறம் அரசின் ஊழல் செயற்பாடுகளினால் அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படும் நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறு நிறைவேற்று அதிகாரத்தை தம்மிடம் வைத்துக்கொண்டு அரசானது நாட்டை பயங்கரமான நிலைக்கு கொண்டு செல்கின்றது.

அரசும் அரச குடும்பத்தை சார்ந்தவர்களும் தத்தமது பிள்ளைகள் நாம் என்று சுயநலம் கருதி செயற்பட்டு எமது நாட்டு மக்களையும் நாட்டையும் அசௌகரியத்திற்கு இட்டு செல்கின்றார்கள்.

நிறைவேற்று அதிகாரத்தை நாட்டில் செயற்படுத்தும் முன்பே நாம் இதனை கொண்டு வருவதனை எதிர்த்தோம்.

நிறைவேற்று அதிகாரத்தை நாட்டில் செயற்படுத்த ஜனாதிபதிக்கு அனுமதிக்கக் கூடாது என நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினோம். அப்போது அதனை எந்த கட்சியும் செவிமடுக்கவில்லை. இப்போது அதன் பலனை அனைவரும் அனுபவிக் கின்றனர். எமது முன்னைய தேசத் தலைவர்கள் இருந்திருந்தால் இந்த அரசின் செயற்பாடுகளை பார்த்து வெட்கப்பட்டிருப்பார்கள்.

எமது நாட்டில் சுபீட்சமான ஒரு நிலைமை மக்களின் எதிர்காலம் மிகவும் நல்ல நிலைமையை எட்ட வேண்டுமானால் சிறந்த ஒரு ஆட்சி மாற்றம் தேவை என அவர் தெரிவித்தார். (6)

# மரண தண்டனையை ஒழிக்குமாறு பிரிட்டன் இலங்கையிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து மரண தண்டனையை நீக்குமாறு பிரித்தானியா கோரிக்கை விடுத்துள்ளது. பிரித்தானியா தனது அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து மரண தண்டனையை நீக்கி 50 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளதை முன்னிட்டு, கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் லோரா டேவிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான உயர்ஸ்தானிராக டேவிஸ் பணியாற்றி வருகிறார். உலக நாடுகளில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் மரண தண்டனை உள்ளடக்கப்பட்டிருந்தாலும் 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கு பின்னர் எவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதியே இறுதியாக இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

2002 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி வரை மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இலங்கையில் மீண்டும் மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டும் என உள்நாட்டில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம், கொலைகள், போதைப்பொருள் விற்பனை போன்ற பாரிய குற்றச் செயல்களின் அதிகரிப்பே இந்த கோரிக்கைக்கு காரணமாக அமைந்துள்ளது. இலங்கையில் 700 இற்கும் மேற்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் சிறை தண்டனை அனுபவித்து வருவதுடன் பலர் தண்டனையை குறைக்குமாறு கோரி மேன்முறையீடு செய்துள்ளனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாடி வேல் கொண்டு எம்மைக் காக்க மறுபடியும் வாராயோ?



கம்பவாரிதி - இ.ஜெயராஜ்-

உலகமது உயர்ந்திடவே உவப்போடென்றும்
ஓங்கார மயில் ஏறி உலகைச் சுற்றி
நலங்கள் எலாம் பக்தர்க்கு அள்ளி ஈயும்
நல்லூரான் திருவடியை நாளும் எண்ண
களங்கமிலா உள்ளமதும் கல்வி தானும்
களிப்பான வாழ்வோடு செல்வம் சேரும்
மலங்கள் எலாம் ஓட்டுகிற முருகன் பாதம்
மனதிருத்தி எந்நாளும் வணங்குவோமே!

கொடியேறிக் கோபுரத்தின் உச்சி சேர,
கொண்டாடி மாதரெலாம் கூடி உன்னை
அடியளந்து வீதிவலம் தினமும் செய்து
அழுதுதழுது தொழுதுநிதம் வருவதென்னே?
படியும் மணல் உடலெங்கும் பரவி நிற்க
பக்தியொடு முருகா! என்றிளைஞர் எல்லாம்
விடிபொழுதில் பிரதிட்டை செய்யும் போது
விளைகின்ற அருளதனின் அளவு என்னே?

வெள்ளி மயிலேறி அருள் விளைந்து பொங்க
வீதியுலா வருகையிலே அன்பரெல்லாம்
அள்ளி, அள்ளி உன் அழகைக் கண்களாலே
ஆறாது பருகிடுவர் அருகே நின்று
வள்ளியொடு தெய்வானை வரங்கள் ஈய
வானவரும் அக்காட்சி தனையே காண
துள்ளிநிலம் சேர்ந்திடுவர் துதிப்பரென்றால்
தூயவனாம் நல்லூரான் பெருமையென்னே?

சூரனொடு தம்பியரும் தேவர் தம்மை
சூழ்ந்தே தான் கொடுமை செய சிவனார் நெற்றி
தீரமிகு கண்ணதனில் பொறியாய்த் தோன்றி
திகழ் பொய்கை தனில் வீழ்ந்து மழலையாகி
ஆரமுதாய்க் கார்த்திகையாம் பெண்கள்அள்ளி
அன்புசெய வளர்ந்தோங்கி அன்னைஅள்ள
ஆறுமுகம் ஆன பொருள் ஆகி நின்று
ஐயன் அவன் அருள் செய்யும் கோயில் நல்லூர்.

மஞ்சம் அதில் ரதம் ஏறி வந்து நிற்பான்
மனம் இனிக்க மாம்பழத்தை பெறுதற்காக
தஞ்சம் இலா ஆண்டி என தனித்து நிற்பான்
தரணியிலே தங்க ரதம் ஏறி நிற்பான்
சஞ்சரிப்பன் சப்பறத்தில் இலங்கைவேந்தன்
தனைமிதித்துக் கைலாயம் தனிலே நிற்பான்
வஞ்சமிலா அன்பர்தமை மகிழச் செய்ய
வருமுருகன் வடிவுந்தான் பலவாம் அம்மா!



வீதியெலாம் வெண்மணலாய் விரிந்த கூட்டம்
வீறுடனே முருகா! என்றழுது நிற்க
நீதியெலாம் தனதாக்கி நீசர்தம்மை
நெடிய பெரும் வேலாலே நிலத்தில் மாய்க்க
ஆதிமுதல் தேர் ஏறி அழகு பொங்க
அற்புதமாய் வருகின்ற காட்சி என்னே?
வேதியர்கள் ஓங்காரம் விரும்பிச் சொல்ல
விண்முட்டும் தேரேறும் அழகு என்னே?

தேரேறி தீமை எலாம் வதையே செய்து
திகழ் வடிவம் தனை மாற்றி தேற்றம் கொண்டு
ஊரெல்லாம் வியந்திடவே பச்சைவண்ண
உடைசார்த்தி இறங்குகிற அழகோ கொள்ளை
மாறில்லா அருள்பொங்க அடுத்த நாளில்
மனதிருக்கும் அன்பர் தமின் மாசு நீக்க
நீரில் நீ இறங்கித் தான் தீர்த்தம் ஆடி
நிமிர்கின்ற அருளிற்கு ஈடும் உண்டோ?

நல்லூரான் விழவென்று சொன்னாற்போதும்
நங்கையர்கள் வீடெல்லாம் தூய்மைசெய்வர்
பல் நாளும் உயிர் கொன்று சமைக்கும் தீய
பாத்திரங்கள் பரனேறும் விழவுக்காக
எல்லோரும் பார்க்கவென இளைய மாதர்
ஏழெட்டுச் சேலைகளை வாங்கிச் சேர்ப்பர்
மல்லார்ந்த இளையோரும் மனதை ஈர்த்த
மங்கையரைக் காணவென மருகி நிற்பர்.

தள்ளாத வயதுடையோர் முருகா! என்று
தமது இயலாமையெலாம் சொல்லி உன்னை
பொல்லாத பிறவி தனைப் போக்கு என்று
பொருமிடுவர் குழந்தைகளும் மனமே பொங்க
நில்லாது ஓடி நிதம் பந்தல் எங்கும்
நீட்டுகிற சக்கரை நீர் அள்ளி மாந்தி
கொள்ளாத வயிறதனை சினந்து நிற்பர்
கோவிலிலே யாசகரும் வறுமை நீப்பர்.



நல்லூரா! உன்னாலே தமிழர் தம்மின்
நலம் மிகுந்த வாழ்வே தான் நன்கு ஓங்கி
பொல்லாத பகைவ ரெலாம் ஓய்ந்து போக
புதிதாக மீண்டேதான் வந்திடாதோ?
வல்லானே உன் கருணை விழிகளாலே
வளமெல்லாம் மீண்டும் எமைச் சார்ந்திடாதோ?
மல்லாடி வேல் கொண்டு எம்மைக் காக்க
மறுபடியும் வாராயோ? வணங்கி நின்றோம்.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

## தெய்வீக இசையரங்கு

நல்லூர்க்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய இசையரங்க நிகழ்வில் பாடல் சின்மயி, ஆருத்திரா சேவியர், வயலின் எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் ப்ரம்ம ஸ்ரீ எஸ்.சிவசுந்தரசர்மா, கடம் எஸ்.ரவிசங்கர் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய தினம் க.ஈஸ்வரன் ஆற்றவுள்ள **முருகியல் வாழ்வு** எனும் தலைப்பிலான சொற்பொழிவும் அராலி கோகுலம் அறநெறிப் பாடசாலை, கோப்பாய் அருள் முருகன் அறநெறிப் பாடசாலை, கோப்பாய் சித்திர வேலாயுதர் அறநெறிப் பாடசாலை, ஏழாலை ஸ்ரீ கண்ணகி அம்பாள் அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை, மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

## ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ்.வதி விட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் **முதுமை ஓர் இனிமை** எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

## தெய்வீக கலையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் தெய்வீக கலையரங்கு தினமும் மாலை 4 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதன் இன்றைய நிகழ்வுகளாக கனகரட்ணம் மகா வித்தியாலய மாணவர்கள் வழங்கும் புஸ்பாஞ்சலி, கீர்த்தனை தில்லானா, குழு இசை என்பன இடம்பெறவுள்ளன.


## இசைப்பேருரை

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ.வை.நித்தியானந்தசர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன் [illegible] கங்கை வேடன் எனும் தலைப்பிலான இசைப்பேருரை இடம் பெறவுள்ளது.

## இசைநிகழ்ச்சி

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வாக ஹம்சவதி ஜெகதீஸ்வர சர்மா வழங்கும் இசை அர்ச்சனை இடம் பெறவுள்ளது.

# நல்லூரான் திருவடிக்கு இன்று பதினாறாம் திருவிழா



## குறை தீர்க்கும் குமரனவன்



குறை தீர்க்கும் குமரனவன் - எம்
நிலை கண்டு ஓடிவந்து
கடல் போல கருணை தந்து
கரம் நீட்டுவான்
உலை வேக வீடுகளில் முருகன் - அருள்
என்றும் நிலைத்திருக்க
மலை போல அவன் கருணை
விலை போகா நிரந்தரம்

மாவை.நா.கஜேந்திரன்.

## கருணைக் கற்பகமே

தமிழினத்தின் சொத்தாய் தமிழ்க் கடவுளராய்
தமிழ் ஞானப்பிரியனாய் தமிழமுதக் கடலினனாய்
தமிழர் தாம் மார்தட்டி பெருமை பெறும் உரித்துடையோய்
தமிழ்ப்புலமை தனை தந்து வாழவழி காட்டி வைத்தாய்
நல்லூர் பெருமகனே! தலை சிறந்த கோயில் கொண்டாய்
நல்லூர் செல்லப்பன் முதல் யோகர்வரை சித்தனாக்கிவைத்தாய்
எம் உயிர் உள்ளவரை உமைத்துதிப்போம் வேலவனே
எம் நாவால் உனைப் போற்றி பணிகின்றோம் சண்முக கடவுளே

ப.பத்மநிருபன், சங்கானை.

## நல்லைப்பதி நாயகனே



நல்லைப்பதி நாயகனே நானிலத்தோர்
நயந்து போற்றும் பெருவடிவுடையோன்
அழகன் எனும் பெருமிதத்தால்
அருள் வழங்கும் சிறப்புடையோன்
ஆறுமுகமும் அருள் ஒளிப்பார்வையும்
ஆறுதல் அளித்திடும் அபய கரமும்
எம்மினம் வாழ்ந்திட அருளிடும் ஐயா
நல்லை நாயகனே ஏழுலக காவலனே

தமிழமுதக்குருமணி, சிவஸ்ரீ க.ஜெயராமக்குருக்கள்.

## நல்லூரான் திருவடிக்கு

அழகுண்டு அருளுண்டு அவனடியில் திருவுண்டு
ஒளியுண்டு வழியுண்டு ஓங்காரப் பொருளுண்டு - நல்லூரான்
திருவடியை நண்ணி நிற்போர் தமக்கு
எந்நாளும் இல்லை இடுக்கண்

அ.பத்மினி, யா/உசன் இராமநாதன் ம.வி.

## வெண்பா

விக்கிரகம் நல்லூரில் வீதி வலம்வரவே
அக்கிரமம் போகும் அமைதிவரும் - பக்குவத்தை
ஆறுமுகன் வாயில் அமர்ந்து தியானிக்கத்
தேறுமே உள்ளந் தெளிந்து

வைத்திய கலாநிதி சி.இராசரத்தினம்.

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

வாழ்த்தியதும் வானவர்கள் வந்து முருகன் பாதம்
தாழ்த்தியதும் தம்மின்னல் தனைத்தீர்த்தான் - சூழ்ந்துவரும்
பல்வினைகள் போக்கியெமைப் பாலூட்டிக் காக்கும் தாய்
நல்லை நகர்கந்தனென நம்பு

கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலிலே ஒரு தோணி!

முன்னாள் மத்திய அமைச்சர் நட்வர் சிங் எழுதியுள்ள சுயசரிதை காங்கிரஸ் கட்சிக்குள் கலகத்தைக் கிளப்பி உள்ளது. 2004 ஆம் ஆண்டில் சோனியா காந்தியை பிரதமராக விடாமல் தடுத்தது ராகுல் காந்திதான். சோனியா காந்தி சொந்த விருப்பத்தின் பேரில் பிரதமர் பதவியை துறக்கவில்லை என்று போட்டு உடைத்திருக்கிறார் நட்வர்சிங். இதுவரை, தேடிவந்த பிரதமர் பதவியை மறுத்த தியாகியாக, பாரததேசத்தைக் காக்கவென்றே இத்தாலியில் பிறப்பெடுத்து வந்த அன்னையாக காங்கிரஸ்காரர்களால் புகழ் பாடப்பட்டுவந்த சோனியா அம்மையார், உயிரச்சத்திற்குப் பயந்தே அந்தப் பதவியை மறுத்தார் என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.

“சோனியா காந்தி உண்மையிலேயே தனது மனசாட்சி கூறிய தன் காரணமாக பிரதமர் பதவியை மறுக்கவில்லை. அவர் இந்தியப் பிரதமராக தயாராகவே இருந்தார. எனினும் அப்போது சோனியா பிரதமராவதை ராகுல் காந்தி விரும்பவில்லை. தனது பாட்டி இந்திரா காந்தி, தந்தை ராஜீவ் காந்தி ஆகியோருக்கு ஏற்பட்டது போன்ற துயரமான முடிவு தனது அம்மா சோனியாவுக்கும் ஏற்பட்டுவிடும் என்ற அச்சம்தான் ராகுலின எதிர்ப்புக்கு காரணம். ஒரு மகனாக சோனியா பிரதமராவதை தான் விரும்பவில்லை என்றும் ராகுல் கூறினார். அதனால்தான் சோனியா பிரதமர் பதவியை ஏற்கவில்லை” என்று புதிய குண்டை வீசி இருக்கிறார் நட்வர் சிங்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கையும் அவர் தனது சுயசரிதையில் காட்டமாக விமர்சித்திருக்கிறார். இதையடுத்து காங்கிரஸ் தலைவர்கள் பலர் நட்வர் சிங்கை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். தனது சுயசரிதை பரபரப்பாக விற்பனையாக நட்வர் சிங் செய்துள்ள விளம்பர உத்தியே இது என்று மன்மோகன் சிங் பதில் அளித்திருக்கிறார்.

முன்னாள் பிரதமர் நரசிம்மராவுடன் சோனியாவுக்கு நல்லுறவு இருக்கவில்லை என்பதையும் பகிரங்கப்படுத்தி இருக்கிறார் நட்வர் சிங். இது ஒன்றும் யாருக்கும் தெரியாத ரகசியமல்ல. ஆனால், அதிகார மையத்தில் புழங்கிய ஒருவரின் வாயிலிருந்து வரும் வாக்குமூலத்திற்கு அதிரடிப் புயலைக் கிளப்பும் சக்தி இருக்கவே செய்கிறது.

தவிர, ஊழலில் கரை புரண்ட காங்கிரஸ் கட்சி தனது நேர்மையை நிரூபிக்க பலிகொடுத்த ஆடுதான் நட்வர் சிங் (ஈராக் நாட்டுடனான உணவுக்கு எண்ணெய் ஒப்பந்தத்தில் நடைபெற்ற முறைகேட்டால் 2005 டிசெம்பரில் அமைச்சர் பதவியை இழந்தார் நட்வர்சிங்). எனவே புகைச்சலில் காரநெடி அதிகமாகவே இருக்கிறது. அவரது சுயசரிதையின் பெயர் **‘ஒன் லைஃப இஸ் நாட் இனஃப்’**. உண்மையில் காங்கிரஸின் கயமைகளைத் தோலுரிக்க இந்த ஒரு நூல் போதாது. சோனியாவும் தன் பங்கிற்கு சுயசரிதை எழுதப் போகிறாராம். மன்மோகனும் கூட எழுதலாம்.

ஆயினும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொடிகட்டிப் பறந்த பல தலைவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள் என்பதே தெரியாமல் இருப்பது புதிராக இருக்கிறது. பா.ஜ.கவை சீண்டுவதற்காக செய்தியாளர்களை சந்திக்கவென்றே நியமிக்கப்பட்டிருந்த தில்லி வழக்கறிஞர் கபில் சிபல் ஏளனமாகப் பேசுவதில் வல்லவர். அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை. மணிஷ் திவாரியையும் காணோம. அபிஷேக் சிங்வி, திக்விஜய் சிங், ஜெயந்தி உள்ளிட்ட பல வாயாடி வித்தகர்களும் மௌனமாகிவிட்டனர்.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது, சோனியாவுக்கு சலாம் போட்டு அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொண்டு பதவி சுகம் அனுபவித்த பலர் இப்போது கட்சித் தலைமையகம பக்கமே வருவதில்லை. இப்போதுதான் தெரிகிறது, காங்கிரஸ் கட்சியை இதுவரை ஒன்று சேர்த்து வைத்திருந்தது அதிகாரப்பசி மட்டுமே என்பது.

அதனால்தான் பல மாநிலங்களிலும் காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் தேசியத் தலைமைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து வருகிறார்கள். குறிப்பாக ராகுல் காந்திக்கு எதிராக பல தலைவர்கள் பகிரங்கமாக குற்றஞ்சாட்டத் தயாராகிவிட்டார்கள். 3 மாதங்களுக்கு முன்னிருந்த நிலைமையே வேறு!


தேர்தலில் வெற்றி, தோல்வி இயல்பானது. ஆனால், ஒரே படு தோல்வியில் காங்கிரஸின் எதிர்காலமின்மை பூச்சாண்டியாக அக்கடசியினரை மிரட்டுகிறது. அதனாலதான் பல மாநிலங்களில் ஆட்சியில உள்ள காங்கிரஸ் முதல்வர்களுக்கு எதிராக பூசல் கிளம்பி இருக்கிறது. மகாராஷ்டிராவில் நாராயண் ரானே, ஹரியானாவில் சௌத்ரி பீரேந்தர் சிங், அசாமில் ஹிமந்தா பிஸ்வ சர்மா தலைமையிலான 40 எம்.எல்.ஏக்கள் ஆகியோரின் கலகக்குரலால் காங்கிரஸ் தலைமை ஆடிப்போயிருக்கிறது. கர்நாடகாவில் சித்தராமையாவுக்கும், இமாச்சலப் பிரதேசத்தில் வீரபத்ர சிங்கிற்கும்கூட எதிர்ப்பு வலுத்து வருகிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலும் குத்துவெட்டு துவங்கிவிட்டது. ஜம்மு காஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சியுடனான காங்கிரஸின் கூட்டணி முறிந்துவிட்டது. வரும் தேர்தலில் அங்கு 4 முனைப்போட்டி உறுதி. பா.ஜ.க முதல்முறையாக அங்கு ஆட்சியைப் பிடிப்பதற்கான சூழல் கனிந்து வருகிறது. ஜார்க்கண்டிலும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவுடன் காங்கிரஸ் கட்சியின கூட்டணி விரைவில் முறியலாம்.

விரைவில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள அசாம், மகாராஷ்டிரா, பிகார் மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியினர் இப்போதே நிலைகுலைந்து போயிருக்கின்றனர். காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பலர் கட்சி மாறும் காட்சிகளை வரும் நாட்களில் அதிகமாகக் காண முடியும். மூழ்கும் கப்பலில் தங்கியிருக்க எவரும் விரும்புவதில்லை.

லோக்சபா தேர்தலில் அசாமில் பா.ஜ.க பெற்ற பெரும் வெற்றி, வடகிழக்கு மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் அரசுகளுக்கு பூகம்பம் வந்தது போன்ற உணரவை ஏற்படுத்தி உள்ளது. மகாராஷ்டிராவில் சிவசேனா- பா.ஜ.க கூட்டணிக்கு கிடைக்கப்போகும் வெற்றியைத் தடுக்க முடியாது என்பதை காங்கிரஸ்- தேசியவாத காங்கிரஸ் கூட்டணி இப்போதே புரிந்துகொண்டுவிட்டது.

இந்நிலையில் புதிய அரசியல் சாகசத்தை பிகார் மாநிலத்தில் அரங்கேற்றியுள்ளது காங்கிரஸ்.



அங்கு பிரமாண்டமாக வளர்ந்து நிற்கும் பா.ஜ.க கூட்டணியின் செல்வாக்கை முறியடிக்க, நிதிஷின் ஐக்கிய ஜனதா தளம், லாலுவின் ராஷ்ட்ரீய ஜனதாதளம் கட்சிகளுடன் கூட்டணி அமைத்திருக்கிறது காங்கிரஸ். அக்கட்சிகளுக்கும் பா.ஜ.கவை எதிர்க்க வேறு துணையில்லை என்பதால்தங்கள்முன்பகையை மறந்து, எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கணக்கீட்டில் காங்கிரஸ”டன் கைகோர்த்துள்ளன.

பிகாரில் நிலவிய நிதிஷ்- லாலு மோதல் அனைவரும் அறிந்தது. லாலுவின் அரசியல் எதிரகாலத்தை சூனியமாக்கியவர் நிதிஷ்குமார்தான். பா.ஜ.கவுடன் அவர் ஏற்படுத்திய கூட்டணியால்தான் அங்கு லாலுவின் காட்டுதர்பாருக்கு எதிரான மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி, ராப்ரி தேவியை (லாலுவின் மனைவி) வீட்டுக்கு அனுப்ப முடிந்தது. நாட்டின் பிற மாநிலங்கள்பலவகையில்முன்னேறி வந்த சூழலில் பிகார் இன்னமும் 40 வருடங்கள் பின்தங்கியிருக்கிறது. அதை மாற்ற நிதிஷ்குமார்- சுஷீல்குமார் மோடி கூட்டணி பெரும்பாடுபட்டது. அதற்கு வித்திட்டவர் அன்றைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய். அவர்தான் நிதிஷ்குமாரை பிகார் கூட்டணிக்கு தலைமை தாங்க அனுப்பி வைத்தார். அதையெல்லாம் மறந்துவிட்டார் நிதிஷ்.

அதனால்தான் லோக்சபா தேர்தலுக்கு முன்னதாக பா.ஜ.க தலைமையிலான கூட்டணியிலிருந்து மோ்டியை எதிர்ப்பதாகக் காரணம் கூறி விலகினார் நிதிஷ். அந்த முடிபு எத்துணை தவறானது என்பதை அவர் தேர்தல் முடிபுகளில் உணர்ந்திருப்பார். ஆனால், அதனால் அவர் படிப்பினை பெற்றதாகத் தெரியவில்லை. இப்போதைக்கு ஜிதன் ராம் மாஞ்சியை முதல்வராக்கி, பிரதமர் நரேந்திர மோடியை அலுவல்ரீதியாகச் சந்திப்பதிலிருந்து தன்னைத் தவிர்த்துக்கொண்ட நிதிஷ்குமார், இதுவரையிலும் யாரை எதிர்த்து அரசியல் நடத்தினாரோ, அவர்களுடனேயே கொஞ்சிக் குலாவத் தயாராகி இருக்கிறார். நிதிஷின் வீழ்ச்சி மிகவும் செங்குத்தானது.

அரசியல் கணிதத்தில் கூட்டல் கழித்தல் கணக்குகள் நாம் நினைப்பது போல முடிபுகளைத் தருவதில்லை என்பதை காங்கிரஸோ, நிதிஷோ, லாலுவோ அறியாமல் இருக்க மாட்டார்கள். ஒருவருக்கொருவர் முரண்பட்ட மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்திருப்பது, அக்கட்சிகள் மீதான மக்களின் நம்பிக்கையை மேலும் குலைக்கும் என்பதை வரும் சட்டசபைத் தேர்தலில் அவர்கள் கண்டுபிடிப்பார்கள்.

போதாக்குறைக்கு ராம்விலாஸ பஸ்வானின் லோக் ஜனசக்தியுடனான கூட்டணியும் முன்னாள் துணை முதல்வர் சுஷீல்குமார் மோடியின் செல்வாக்கும், பிகார் அரசியலில் பா.ஜ.க கூட்டணியை வலுவாக வைத்திருக்கின்றன. எதிரிகள் சேர்ந்திருப்பதால், அவர்களை எதிர்க்கவும் அவர்களின் முகத்திரையைக் கிழிக்கவும் பா.ஜ.கவுக்கு சாதகமான சூழல் ஏற்பட்டிருக்கிறது.

தவிர, இடதுசாரிக் கட்சிகள் (சி.பி.எம், சி.பி.ஐ, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி) ஆகியவை இணைந்து ‘மாபெரும் கூட்டணி’யை உருவாக்கியுள்ளதாக அறிவித்திருக்கின்றன. இக்கட்சிகள் மூன்றும் இதுவரை தனித்தனியே காங்கிரஸ், ஆர்.ஜே.டி. ஐக்கிய ஜனதாதளம் கட்சிகளுடன் கூட்டணி கண்டிருந்தவை. கூட்டணி பேரத்தில் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதாகக் கருதும் இக்கட்சிகள் தனியே அ. ணி அமைததிருப்பது, காங்கிரஸின் கனவுகளை கூடுதலாகச் சிதைக்கும்.

இவ்வாறாக தேசிய அளவில் காங்கிரஸ் கட்சியின் நிலைமை புயலில் சிக்கிய பாய்மரக் கப்பல் போலத் தள்ளாடுகிறது. துடுப்புகளும் உடைந்துபோய், மாலுமிகளும் வேறு கப்பல்களுக்குத் தாவும் நிலையில் தலைமை மாலுமி சோனியாவும் தளபதி ராகுலும் என்னதான் செய்ய முடியும்? சுயநலமொன்றே பின்னிப் பிணைத்திருந்த, அதிகார அரசியலை மையமாகக் கொண்ட காங்கிரஸ”க்கு இது ஒரு சோதனைக்காலம்.

வரும் மாதங்களில் மத்திய அரசால் எடுக்கப்படும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளும், தொடுக்கப்படும் வழக்குகளும் காங்கிரஸ் கட்சியின் நிலைமையை மேலும் சிக்கலாக்கலாம். உள்கட்சி ஜனநாயகம் இல்லாத கட்சிக்கு- சம்பாத்தியத்தையே குறிக்கோளாகக் கொண்ட தலைவர்களால் நடத்தப்பட்ட கட்சிக்கு என்ன நடக்குமோ அதுதான் இப்போது காங்கிரஸ் கட்சிக்கு நடக்கிறது.

அதிகார இடைத்தரகர்களின் கட்சியாக எப்போது காங்கிரஸ் மாறியதோ, சோனியா என்ற தனிநபருக்கு ஜால்ரா போட எப்போது நூற்றாண்டு கண்ட காங்கிரஸ் துணிந்ததோ, அப்போதே அதன் படுகுழி நோக்கிய பயணம் துவங்கிவிட்டது. இவற்றிலிருந்து கற்றுக்கொள்ள தற்போதைய ஆளும் கட்சியான பா.ஜ.கவுக்கும் பாடம் இருக்கிறது.

*-இணையம்-*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திறந்தவெளி சிறையாக நாட்டை மாற்றும் அரசு

## முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

அரசாங்கம் புதிதாக அறிமுகப் படுத்தவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவது என முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டு பிரஜைகளின் கைவிரல் அடையாளங்களை பெறும் அங்குலிமாலா நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் நாட்டையும் திறந்த வெளி சிறைச்சாலையாக மாற்ற அரசாங்கம் முயறசித்து வருவதாகவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர பி.ஜாகொட குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு ராஜகிரிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திபபில் அவர் இதனை தெரிவித்துள்ளார.

முழு நாட்டையும் திறந்த வெளி சிறையாக மாற்ற அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த முயற்சிக்கு எதிராக மக்கள் தமது கைவிரல் அடையாளங்களை வழங்குவதை நிராகரிக்க வேண்டும். இலங்கையில் ஆட்களை பதிவு செய்வதற்காக இருக்கும் ஒரே சட் டம் 1968 ஆம் இலக்கம் 32 என்ற ஆட்பதிவுச் சட்டமே அமுலில் இருக்கின்றது.

1971, 1981 ஆம் ஆண்டுக ளில் அதில் திருத்தங்கள் செய்யப்பட்டது. 1972 ஆம் ஆண்டு கையால் எழுதும் அடையாள அட்டை வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது.

இதனையடுத்து 2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17 ஆம் திகதி பழைய அடையாள அட்டைக்கு பதிலாக இலத்திரனியல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்த அமைச்சரவை தீர்மானித்தது.

கையால் எழுதும் அடையாள அட்டைக்கு பதிலாக இலத்திரனியல் அடையாள அட்டை வழங்குவதை நாங்கள் எதிர்க்கவில்லை.

எனினும் இலங்கையில் 15 வயதுக்கு மேற்பட்ட சகலரது விபரங்கள் உடல் அடையாளங்களுடன் கூடிய தேசிய பிரஜைகள் தரவுகளை தயாரிப்பது என அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இது நாட்டை இராணுவமயப்ப டுத்தும் நடவடிக்கையின் மற்று மொரு செயற்பாடாகும். இதனை கொண்டு வர எண்ணியுள்ளவர்கள் முழு சமூகமும் குற்றவாளிகள் என கருதுகின்றனர்.

நடைமுறையில் உள்ள சட்டத்தினபடி குற்றவாளிகள் என அடையாளபடுத்தப்பட்டவர்களிடம் மட்டுமே கைவிரல் அடையாளங்களை பெற முடியும். நீதிமன்றத்தின் உத்தரவின் படியே அதனையும் பெற முடியும்.

தற்போது நாட்டில் நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மூலமாக நடவடிக்கை தொடர்பான கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கிராம சேவகர்கள் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை வழங்கியுள்ளனர்.


அதில் தனி நபரின் விபரங்கள் மாத்திரமல்லாது, நபரின் குடும்ப விபரங்கள் மற்றும் கைவிரல் அடையாளமும் பெறப்படுகிறது. 1968 இலக்கம் 32 என்ற சட்டத்திற்கு அமைய என விண்ணப்பத்தின் மேல் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின்படி அப்படியான விபரங்களை பெற அதிகாரமில்லை. அரசாங்கம் இந்த சட்டத்தை இரத்துச செய்து விட்டு அடக்குமுறை சட்டம் ஒன்றை கொண்டு வரப் போகிறது. அந்த புதிய சட்டம் நிறைவேற்றப்படும முன்னர் செயற்பாடுகளை ஆரம்பிததுள்ளனர். பிரதேச செயலகங்களில் நடக்கும் பயிற்சி கருத்தரங்குகளுக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் அதிகாரிகள் செல்வதில்லை. இராணுவ அதிகாரிகளே செல்கின்றனர். எந்த அடிப்படையில் இராணுவம் இதில் தலையிடுகிறது.

இது அடையாள அட்டை தொடர்பான பிரச்சினையல்ல. அடக்குமுறையின் முயற்சியாகும். ஐரோப்பிய நாடுகள் கைவிரல் அடையாளங்களை தமது பிரஜைகளின் குடியுரிமைகளை பெறுவதாக அரசாங்கம் கூறுகிறது.

கலாசார விழுமியங்களை கொண்ட எந்த நாடாவது தமது பிரஜைகளின் வாழ்வியல் அடையாளங்களை திரட்டுகிறதா என்பதை சுட்டிக் காட்டுமாறு நாம் சவால் விடுக்கின்றோம் எனவும் ஜாகொட மேலும் தெரிவித்தார். (6)

# கராத்தே பயிற்சியில் கலக்கும் ஞானசார தேரர்



பொதுபல சேனா அமைப்பின் செயலா ளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கரா த்தே தற்காப்பு கலை பயி ற்சியில் ஈடுபட் டுள்ள புகைப்படம் ஒன்று வெளியாகி யுள்ளது.

ஆங்கில இணையத்தளம் ஒன்றில் வெளி யிடப்பட்டுள்ள இந்த புகைப்படம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என ஞானசார தேரர் கூறியுள்ளார்.

உடலின் மேல் பகுதியில் காவி அணியாத பிக்கு ஒருவர் மற்றுமொரு பிக்குவிற்கு கராத்தே கற்றுக் கொடுப்பது போன்று இந்த புகைப் படம் அமைந்துள்ளது. முகம் தெரியாத வகையில் இந்த புகைப்படத்தில் உள்ள பிக்கு காணப்பட்டாலும் தோற்றத்தில் அது ஞான சார தேரர் போன்றே உள்ளது.

எனினும் அந்த புகைப்படத்தில் இருப்பது தான் அல்ல எனவும் அதன உண்மை தன்மை பற்றி தனக்கு தெரியாது எனவும் ஞான சார தேரர் கூறியுள்ளார். அந்த புகைப்படத்தை தான் பார்த்ததும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் புகைப்படத்தின் நம்பகத் தன்மை பற்றி எந்த பிரச்சினையுமில்லை எனவும் படத்தில் இருப்பது ஞானசார தேரரே என புகைப்படத்தை வெளியிட்ட ஆங்கில இணையத்தளத்தின் ஆசிரியர் கூறியுள்ளார்.

# பாலஸ்தீனத்திற்கு இலங்கை நிதியுதவி

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு இடையிலான மோதல்கள் நிறுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாலஸ்தீனத்திற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் வன்முறைகள் இடம் பெற்று வருகின்றது.

இந்த மோதல்களில் படையினரும் இரு நாடுகளினது பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

அதிகளவில் பாலஸ்தீன பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பாலஸ்தீன - இலங்கை நட்புறவு அமைப்பின் ஸ்தாபகரான ஜனாதிபதி பாலஸ்தீனத்திற்கு நிதி உதவியை வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி பாலஸ்தீனத்திற்கு விஜயம் செய்திருந்த போது அவருக்கு விருது வழங்கப்பட்டதுடன் அந் நாட்டின் ஓர் வீதிக்கு ஜனாதிபதியின் பெயரும் சூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# இலங்கை மீனவர்கள் இந்தியாவால் விடுதலை

இலங்கை மீனவர்கள் 16 பேரை இந்தியா விடுதலை செய்துள்ளது

இலங்கையின் கடற்றொழில் அமைச்சு இதனை நேற்றுமுன் தினம் தெரிவித்துள்ளது.

கேரளாவில் தடுத்து வைக்கப் பட்டிருந்த இந்த 16 பேரும் விடுவிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது

ஏற்கனவே இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 94 தமிழக மீனவர்களும் இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுதலை செய்யப்படுவதற்கான உத்தரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# இன்று ஒரு தகவல்

## அளவுக்கு மிஞ்சினால்

அசடு அண்ணாசாமி என்று ஒருவர் இருந்தார்! அவர் அசட்டுத்தனமாக ஏதாவது பண்ணிக் கொண்டே இருப்பார். ஒருநாள் உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போனார். டாக்டரும் சோதித்துப் பார்த்தார். சத்துக் குறைவாக இருந்தது. அதற்குத் தேவையான விற்றமின் மாத்திரை எழுதிக் கொடுத்தார்.

இதில் 30 மாத்திரை வாங்கிக் கொள்ளுங்கள். தினமும் ஒன்று சாப்பிட்டு வந்தால் சரியாகப் போய்விடும் என்றார்.

டாக்டர்! நான் ஒரு யோசனை சொல்லலாமா? இந்த 30 மாத்திரையை எதற்காக 30 நாள் சாப்பிடச் சொல்றீங்க. ஒரே நாளில் சாப்பிட்டால் உடனே குணமாகி விடாதா? என்றார். இது தான் அசடு அண்ணாசாமி!

அதன்பின் அந்த டாக்டர் எச்சரிக்கையாக இருந்தார். 30 மாத் திரையையும் தான் வாங்கி தினம் ஒரு மாத்திரை கொடுத்துக் கொண்டு வந்தார். இல்லையென்றால் விடயம் விபரீதமாகிவிடும் என்பதை புரிந்து கொண்டார். இந்த அண்ணாசாமி மாதிரி நினைப் பவர்கள் நம்மிலும் பல பேர் உண்டு.

சத்து மாத்திரைகளை அதிகம் உட்கொண்டால் உடம்பில் அதிக சத்து சேரும் என்று பல பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. சத்து மாத்திரைகளை அளவுக்கதிகமாக உட்கொண்டால் தேவையில்லாத பல பிரச்சினைகள் வந்து சேரும். அதனால் கவனமாக இருக்க வேண்டும். மருத்துவரை அணுகாமல் நம்முடைய இஷ்டத்துக்கு உட்கொள்ளக்கூடாது.

விற்றமின் D யை அதிகமாக உட்கொண்டால் அதன் காரணமாகவும் அதனால் ஏற்படும் இரத்த கல்சிய அதிகரிப்பு காரணமாகவும் பல உடல் கோளாறுகள் ஏற்படும். விற்றமின் D யை ஒருவர் ஒரு நாளைக்கு 4000 யுனிற் அளவுக்கு உட்கொண்டால் அதன் காரணமாக உடல் அசதி, மனச்சோர்வு, மூளைக்குழப்பம், குமட்டல், வாந்தி, பசியின்மை, மலச்சிக்கல், அதிக சிறுநீர் போக்கு, இதயத்துடிப்பு சீரின்மை போன்ற பாதிப்புக்கள் ஏற்படும்.

விற்றமின் D காரணமாக உடம்பில் கல்சியம் 13 மில்லி கிராம் வரை அதிகரித்தால் கல்சிய கல் உண்டாகும். சிறுநீரகம், நுரையீரல், இதயம், இரத்தக்குழாய், தோல் போன்ற பகுதிகளில் கல்சியகல் உண்டாகும்.

4000 யுனிற் விற்றமின் D யினால் சில சமயம் ஒவ்வாமை காரணமாக உடம்புவலி, வயிற்றுவலி, போன்ற நொய்களை உண்டாக்கும் விற்றமின் D யானது 18 மில்லியன் அளவுக்கு போய்விட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும்.

அடுத்தது விற்றமின் A. விற்றிமின் " A " அடங்கிய மருந்துகளை குழந்தைகளுக்கு சாதாரணமாக கொடுக்கிறோம். கடல்மீன், கல்லீரல் என்பவற்றை தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு விற்றமின் A உடலில் அதிகமாவதால் வயிற்றுவலி, குமட்டல், வாந்தி, தலைவலி, மயக்கம், சோம்பல், கண்நரம்பு உறைவீக்கம், குழந்தையின் உச்சிப்பள்ளம் வீக்கம், தோல் உரிதல் போன்ற பாதிப்புக்கள் உண்டாகும்.

ஒருவர் ஒரு நாளைக்கு 40,000 யுனிற் வீதம் விற்றமின் A யை தொடர்ந்து உட்கொண்டு வந்தாரானால் எலும்புவலி, மூட்டுவலி, எலும்புகளில் அதிக வளர்ச்சி முடி உதிர்தல், உதடு-வாய் வறட்சி, பசியின்மை, உதடு வெடிப்பு, இலேசான காய்ச்சல், எடை இழப்பு, கல்லீரல்- மண்ணீரல் வீக்கம் எல்லாம் வந்துவிடும்.

விற்றிமின் E அதிகமாக உட்கொண்டால் உடல் அசதி, சமிபாட்டு தொந்தரவு, தலைவலி, அதிக இரத்த அழுத்தம் என்பன உண்டாகும். விற்றமின் K அதிகமானால் கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை வரக் கூடும். விற்றமின் C அதிகமானால் உடலில் $B_{12}$ விற்றமின் குறைபாடு ஏற்பட்டு சிறுநீரகத்தில் ஒக்சலேட் கற்கள் உற்பத்தி ஆகலாம்!

இரும்புச்சத்து துத்தநாக மருந்து ஆகியவற்றை அதிகமாக உட்கொண்டாலும் பல பாதிப்புக்கள் ஏற்படும். அதனால் எந்தச் சத்து மாத்திரைகளாக இருந்தாலும் மருந்தாக இருந்தாலும் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

நம்ம அசடு அண்ணாசாமியின் அசட்டுத்தனத்துக்கு இன்னொரு உதாரணம் கூட உண்டு. டாக்டர் ஒரு தடவை அவரிடம் "தினம் 8 டம்ளர் தண்ணியாவது குடியுங்கள்!" என்றார். உடனே அவர் "அது முடியாது டாக்டர்... தினம் 5 டம்ளர் தண்ணிதான் என்னால் குடிக்க முடியும்! "என்றார். "ஏன்?" என்று கேட்டார் டாக்டர். அதற்கு அவர் "எங்கவீட்டில் 5 டம்ளர் தானே இருக்கு" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

தகைமைகள் இருந்தும் இது வரை நிரந்தர நியமனம் கிடைக்கவில்லையென பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட தொண்டராசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லை.மாவட்டத்தில் முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய இரு கல்வி வலயங்கள் இயங்கி வருகின்றன.

துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய கல்விக் கோட்டங்களும் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையின் கீழ் புதுக்குடியிருப்பு, கரைதுறைப் பற்று, வெலிஓயா ஆகிய கல்விக் கோட்டங்களும் இயங்கி வருகின்றன.

மேற்படி இரு கல்வி வலயங்களின் கீழ் எதுவிதவேதனமுமின்றி யுத்த காலத்திற்கு முன்னரும் மீள் குடியேற்றத்திற்கு பின்னரும் தொண்டராசிரியர்களாக பணி புரிந்த பலருக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டு தற்போது பயிற்சி கலாசாலையில் இருவருடகால பயிற்சி இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் முல்லை. மாவட்டத்தை சேர்ந்த 184 இற்கு மேற்பட்ட தொண்டராசிரியர்களுக்கு 01. 07. 2013 அன்று நிரந்தர நியமனமாக ஆசிரியர் உதவியாளர்தகைமைவழங்கப்பட்ட நிலையில் அவர்கள் யாழ்ப்பாணத்திலும் தென்னிலங்கையிலும் தமது பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் முல்லை.கல்வி வலயத்தில் 22 தொண்டராசிரியர்களும் துணுக்காய் கல்வி வலயத்தில் 8 தொண்டராசிரியர்களுமாக மொத்தம் 30 தொண்டராசிரியர்கள் பதினைந்து வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து கடமையாற்றி வருகின்றனர்.

அந்தந்த காலப்பகுதியில் நடைபெற்ற நேர்முகத்தேர்வுகள் அனைத்திலும் தவறாது கலந்து கொண்டவர்களாக சகல கல்வித் தகைமைகளையும் கொண்ட இவர்களது பெயர்கள் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான ஏ தரப்பட்டியலில் வாங்கப்பட்டிருந்தது.

குறித்த பட்டியலில் ஏ, பி, சி என மூன்று வகையாக தரப்பட்டுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் சி தரப்பட்டியலில் இருந்த சேவைக்காலம் குறைந்த பல தொண்டராசிரியர்கள் நிரந்தர ஆசிரியர் உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கி ஏ பட்டியலில் இருந்த எமது பெயர்களை நீக்கியது ஏன்? என கேள்வி எழுப்பி பாதிக்கப்பட்ட தகைமையிருந்தும் தவறவிடப்பட்ட தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி முல் லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் வைத்து மகஜர் ஒன்றினை 13.11.2013 அன்று கையளித்திருந்தனர்.

இன்றுவரை பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்களான எமக்கு எதுவித தீர்வுகளும் கிடைக்கவில்லை.

எனவே வடமாகாண கல்வி அமைச்சர் குறித்த மகஜரை பெற்று தவறவிடப்பட்ட அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் 2014 ஆம் ஆண்டிற்குள் நிரந்தர நியமனம் பெற் றுத் தருவதாக உறுதி கூறி சென்றார்.

இவ்வருடத்திற்குள்ளாவது நிரந்தர நியமனம் கிடைக்குமா? என பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (2-267)

## மரம் ஏறிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து மரணம்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கச்சடம்பன் கிராமத்தில்கோவில்பூசைக்காக தென்னை மரத்தில் ஏறி செவ்விளநீர் பறித்த குடும்பஸ்தர் ஒருவர் தவறி வீழ்ந்து பரிதாபமாக மரணமடைந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

பெரிய புளியங்குளத்திலுள்ள முத்துமாரியம்மன் ஆலய பூசையொன்றின் பொருட்டு மரத்திலேறி செவ்விளநீர் பறிக்கும் போது தவறி வீழ்ந்து மயங்கிய நிலையில் மாங்குளம் பொது வைத்தியசாலைககு கொண்டு செல்லப்பட்டபோது வழியில் அவரது உயிர் பிரிந்துள்ளது.

இதில் கச்சடம்பன் கிராமத்தைச் சேர்ந்தவரும் நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையுமான சுப்பிரமணியம் மதியழகன் (வயது 40) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவரது சடலம் தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் மரணமடைந்த குடும்பஸ்தர் வன்னியில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் பொருளாதார ரீதியில் பாதிப்படைந்த நிலையில் மீள்குடியேறி வறுமையுடன் போராடி வாழ்ந்த நிலையிலேயே இது நிகழ்ந்துள்ளமை கிராம மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.(2-15)



கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் டென்மார்க் கிளையின் நிதியில் மாணவர்களுக்கு ஏழு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு கைதடி மத்தி சரஸ்வதி சனசமூக அரங்கில் அண்மையில் நடைபெற்றதைப் படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

## மூக்குக்கண்ணாடி வழங்கல்

(மல்லாவி)

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரியின் நெறிப்படுத்தலின் கீழ் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் நட மாடும் கண் சிகிச்சை முகாம் கடந்த 12 ஆம் திகதி நெட்டாங்கண்டல் வைத் தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இக்கண் சிகிச்சை முகாமில் பாண்டியன் குளம், நெட்டாங்கண்டல், சிராட்டி குளம், பனஸ் காமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் 46 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் செல்வதற்கும் மூக்குக்கண்ணாடி வழங்குவதற்கும் மருத்துவர் சிபார்சு செய்துள்ளார்.

இந்நிகழ்வில் மல்லாவி பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட நெட்டாங்கண்டல் கிராமிய வைத்தியசாலையின் பணியாளர்களும் இணைந்து நடமாடும் கண் சிகிச்சை முகாமில் பங்கேற்றனர். எதிர்வரும் 19ஆம்திகதி செவ்வாய்க் கிழமை நெட்டாங்கண்டல் வைத்தியசாலையில் வைத்து மூக்குக்கண்ணாடி தேவையானவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (2-15)

## குடிக்க தண்ணீரின்றி தவிக்கும் மக்களுக்கு உதவுமாறு அமைப்புகளிடம் வேண்டுகோள்

(மல்லாவி)

முல்லைமாவட்டத்திலுள்ளமாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட் பட்ட வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 8 கிராமங்களுக்கு குடிநீர் வழங் குவதற்கு நீரை சேகரித்து கொள்வதற்கான பௌசர் வண்டிகள் மற்றும் நீர்த்தாங்கிகள் போதியளவு இன்மையால் குடிநீர் பற்றாக்குறையால் அல்லலுறும் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் புலம் பெயர் உறவுகள் இவற்றை உடன் அன்பளிப்புச் செய்து உதவுமாறு அவசர வேண்டுகோள் ஒன்றை மாந்தை கிழக்கு தவிசாளர் அம்பலவாணர் தனிநாயகம் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்கூறுகையில்,

என்றுமில்லாதவாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவு மக்கள் வரட்சியை எதிர்நோக்கியுள்ளனர்.

இங்குள்ள பெரிய நீர்ப்பாசன குளமான வவுனிக்குளம் நீர் வற்றிப் போய்க்கொண்டிருக்கிறது.

இதனால் கிராம மக்களின் குடி நீர் கிணறுகளும் வரண்டு போயுள்ளது.

பாண்டியன்குளம், பொன்னகர், பூவரசன் குளம், விநாயகர்புரம், நெட்டாங்கண்டல், கரும்புள்ளியான் வெள்ள விளாங்குளம், அம்பாள் குளம், ஒட்டு அறுத்த குளம் ஆகிய கிராமங்களில் சுமார் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் குடிநீரின்றி பாரிய கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்களுக்கான குடிநீர் விநியோகம் செய்வதற்கு அரச அதிபரின் நிதியொதுக்கீடு கிடைத்துள்ள போதிலும் எம்மிடமுள்ள தலா 3 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவு கொண்ட இரண்டு நீர் பௌசர் வண்டிகளை வைத்துக் கொண்டு நீர் வழங்கலை சீராக செய்ய முடியாதுள்ளது.

அத்தோடு நீண்ட தூரங்களுக்கிடையில் கிராமங்கள் அமைந்து காணப்படுவதும் வீதிகள், சீரில்லாது இருப்பதுடன் போதியளவு நீர்த் தாங்கிகள் இல்லாது இருப்பதும் மேலதிக தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே நீர் தேவையை மக்களுக்கு பூர்த்தி செய்வதற்கு இரண்டு நீர் பௌசர் வண்டிகளும் சுமார் 20இற்கு மேற்பட்ட நீர்த்தாங்கிக ளும் மேலதிகமாகத் தேவைப்படுகிறது.

ஆதலால் இதனை அனைத்து தரப்பினருக்கும் கவனத்தில் கொண்டு வழங்கி உதவுமாறு அவரது அவசர வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்குழுக்கூட்டம் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும் வணிக கைத்தொழில் அமைச்சருமான ரிசாத் பதியூதீன்ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெறும். (2-267)

## பயிர் மாற்றீடு வயல் விழா

மன்னார் உயிலங்குளத்திலு ள்ள புதுக்கமத்தில் வயல்களில் நெற் செய்கைக்கு பதிலாக சிறுபோகத் தில் நீர்தேவை குறைந்த மாற்றுப் பயிராக பயறு செய்கை பண்ணப்பட்டு அறுவடைக்கு தயாராகவுள்ளதாக வடமாகாண விவசாயம் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

பயிர் மாற்றீடு தொடர்பான வயல் விழா ஒன்று புதுக்கமம் உயிலங்குளத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண விவசாயப்பணிப்பாளர் சி.சிவகுமார் பிரதம விருந்தினராகவும் உலக தரிசனம் நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கு.சு.ஜெயபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாரம்பரியமாக பயிரிடப்படும் பயிர்களுக்கு மாற்றீடாக வேறு பயிர்கள் கூடியளவு வருமானத்தை ஈட்டக் கூடிய குறைந்தளவு நீர்ப்பயன்பாட் டுடன் செய்கை பண்ணும் வகையில் வெற்றிகரமாக செய்கை பண்ணப்பட்டது. இதன்போது இப் பிரதேசத்தில் மாற்றுப் பயிராக செய்கை பண்ணக்கூடிய பயிர்கள் பற்றிய தகவல்கள், பயன்படுத்தக்கூடிய தொழில் நுட்பம் பற்றிய விபரங்கள் மற்றும் சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் பற்றிய விபரங்களை பெற்றுக் கொள்ள லாம்.

விவசாயிகள், விவசாய அபிவிருத்திப் பங்காளர்களான சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், விவசாய ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் இவ்வயல் விழாவில் பங்கு பற்றி பயன்பெறுமாறு கேட்கப்படுகிறது. (2)




## விளையாட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக்ங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்விற்கு யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தரும் பேராசிரியருமான திருமதி வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் ராஜா ரணசிங்க கலந்து சிறப்பிக்கவுள்ளார். (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமைச்சர் மேர்வின் அறிவுரை

# அவன், இவன், நீ என்று பிக்குகள் பேசக் கூடாது

(கொழும்பு)

பௌத்த பிக்குகளின் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா அறிவுரை வழங்கியுள்ளார்.


பொதுபல சேனா அமைப்பின் நடவடிக்கைகள் குறித்து கண்டி அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து அமைச்சர்கள் விளக்கமளித்துள்ளனர். இந்த அமைச்சர்கள் குழுவில் இணைந்து கொண்ட அமைச்சர் மேர்வின் சில்வா ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். பௌத்த பிக்குகளின் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தைகள் மிகவும் நாகரிகமானதாக இருக்க வேண்டும்.

அவன்,இவன், நீ என்றெல்லாம் அநாகரிகமான முறையில் பௌத்த பிக்குகள் பேசக்கூடாது. ஞானசார தேரர் வெளியிடும் கருத்துக்கள் பிழையானவை. இவ்வாறு பேசுவதனால் பௌத்த மதத்திற்கு பாரிய இழிவு ஏற்பட்டு விடும். பௌத்த பிக்குகள் இப்படித்தான் பேசுவார்கள் என்ற பிழையான தோற்றம் உருவாகிவிடும்.

ஞானசார தேரருக்கு எதிராக நாம செயற்படவில்லை. அவரது நடவடிக்கைகள், வார்த்தைகளை கண்டிக்கின்றோம். பாரியளவில் பணத்தைப் பெற்றுக்கொண்டு பௌத்த சாசனத்தை அழிக்கும் முயற்சியில் ஞானசார தேரர் ஈடுபட்டுள்ளார்.

இதற்கு இடமளிக்க முடியாது, இதற்கு எதிராக நாம் செயற்படுவோம். ஞானசார தேரரின் நடவடிக்கைகளை தெளிவுபடுத்தும் நோக்கிலேயே அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்தோம் என அமைச்சர் மேர்வின் சில்வா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (6)

# யாழ்ப்பாண மாணவர்களின் துவிச்சக்கரவண்டி பவனி



(யாழ்ப்பாணம்)

யாழில் இருதய சத்திரசிகிச்சை நிலையமொன்றை அமைக்கும் நோக்கில், ஒக்ஸோனியன் ஹார்ட் பவுண்டேசன் அனுசரணையில் யாழ்.பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்கள் கலந்து கொள்ளும் துவிச்சக்கரவண்டிகள் பவனியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

நேற்று காலை நல்லூர் முருகன் ஆலய முன்றிலில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று பவனியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அமைச்சருடன் ஊர்வலமாய் கைலாசப்பிள்ளையார் கோவில முன்றிலை வந்தடைந்தனர்.

பின்னர் துவிச்சக்கரவண்டி பவனி ஆரம்பமாகி இதன் முதற் கட்டம் யாழ்.கச்சேரி முன்றிலை வந்தடைந்தது.

இதன்போது ஏனைய மாணவர்களுடன் அமைச்சரும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரும் கலந்து கொண்டனர்.

பின்னர் கச்சேரி முன்றிலில் வைத்து மாணவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழியனுப்பி வைத்தார். (6)

# ஜனாதிபதி வேட்பாளர் ரணில் அளவற்ற மகிழ்ச்சியில் மஹிந்த

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்கவை நிறுத்த ஐ.தே.க. முடிவெடுத்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அறிவித்துள்ள நிலையில் அது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மகிழ்ச்சி தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவே என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தி சட்டம் ஒழுங்கை நிலைநாட்டக் கூடிய ஆளுமை ரணில் விக்ரமசிங்கவிற்கே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியின் பொதுவான வேட்பாளராக தெரிவு செய்யக் கூடிய சகல தகுதிகளும் அனுபவமும் ரணிலுக்கு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். ரணிலை விடவும் தகுதியானவர்கள் இருக்கின்றார்களாக என எதிர்க்கட்சிகள் தங்களை தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

சர்வதேச தொடர்பு, பொருளாதார அபிவிருத்தி செய்யும் ஆற்றல், வருமானத்தை அதிகரித்துக் கொள்ள கொள்கை வகுக்கும் பாங்கு போன்ற பல்வேறு விடயங்களில் ரணில் விக்ரமசிங்கவிற்கு சிறந்த அனுபவ முதிர்ச்சியும் ஆற்றலும் காணப்படுவதாகவும் அதனை அனைவரும் அறிந்து கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவரையே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடச் செய்ய வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டில் சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக நியமிக்க பரிந்துரை செய்யப்பட்ட போது கூட அதிகளவான கட்சி உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவரைத் தெரியுமாறு கோரியிருந்தனர் என திஸ்ஸ அத்தநாயக்க ஆங்கில ஊடகமொன்றுக்கு செவ்வியளித்துள்ளார்.

இதேவேளை, ஐ.தே.கவின் இந்த முடிவு மகிழ்ச்சியளிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (6)

# கிருஷ்ணா குழுவினர் கைது

யாழ்.மாவட்டத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படும் கிருஷ்ணா என்ற குழுவைச் சேர்ந்த 4 பேரை கைது செய்ததாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி. றொஹான் மகேஷ் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சமூக விரோதச் செயல்களில் கிருஷ்ணாக்குழு ஈடுபட்டு வருவதாகவும் அந்தக் குழு மானிப்பாய் பகுதியை மையமாக வைத்து இயங்கி வருவதாகவும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை ரோந்து பணியில் ஈடுபட்ட பொலிஸார், மானிப்பாய் சந்தைக் கருகில், சந்தேகத்திற்கிடமான முறையில் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்களில் வாள்களுடன் 8 பேர் நிற்பதை அவதானித்தனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து மேலதிகப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு, அந்தக் குழு சுற்றிவளைக்கப்பட்ட போது, அவர்கள் தப்பி ஓட முயன்றனர்.

இதனையடுத்து, காலுக்குக் கீழ் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு, நால்வர் கைது செய்யப்பட்டனர். மிகுதி நால்வரும் தப்பி ஓடியுள்ளனர்.

இவர்களில், 18, 21, 24 மற்றும் 25 வயதையுடையவர்களே கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 4 மோட்டார் சைக்கிள்கள், 2 துவிச்சக்கர வண்டிகள், 2 வாள்கள், 3 பொல்லுகள், 3 கத்திகள் என்பன மீட்கப்பட்டன.

துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சந்தேக நபர்களில் ஒருவர் காயமடைந்ததுடன் அவருக்கு மானிப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

தப்பியோடிய ஏனையோரை கைதுசெய்யும் பணியில் விசேட பொலிஸ் குழு உருவாக்கப்பட்டு, தேடுதல் பணி முடக்கி விடப்பட்டுள்ளது" என பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (6)

# பாகிஸ்தானின் ௬௮ ஆவது சுதந்திரதினம்

(கொழும்பு)

பாகிஸ்தானின் 68 ஆவது சுதந்திர தினம் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸதானிகராலயத்தில் கொண்டாடப்பட்டது.

இதில் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் சமூகத்தை சேர்ந்தவர்களுடன் இலங்கை முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் சமூகத்தினர், தமது பாரம்பரிய நிகழ்வுகளுடன் உற்சாகத்துடன் தமது சுதந்திர தினத்தை கொண்டாடுவதாக கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. முற்போக்கான சகிப்புத்தன்மையுடன் கூடிய, வலுவான மாறுதலுடன் ஜனநாயக இஸ்லாமிய நலன்புரிய அரசாங்கம் தனது 68 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதாக தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் குவாசிம் குரேஷி தேசிய கொடிகளை ஏற்றி வைத்ததுடன், பிரதமர் நவாஷ் ஷெரீப் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் சுதந்திர தின செய்திகளை வாசித்தார். (6)

# பிரிவுத்துயர் பகிர்வு




**திருமதி கந்தையன் அருளம்மா**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையன் அருளம்மா நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

**சுப்பிரமணியம் தேவதாசன்**



புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரம ணியம் தேவதாசன் கடந்த 13 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Elgin Mills Cemetery,1591 Elgin Mills Road East, Richmond Hill,ON L4S 1M9,Canada என்னும் முகவரியில் நடைபெறும்.



**திருமதி செல்வநாயகம் யோகம்**

நல்லூர் அரசடி வீதி 5-ஆம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் யோகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

**திருமதி பொன்னுத்துரை இராசமணி**



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராசமணி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு A.F Raymonds,Borella என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பொறளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி குமாரச்சந்திரன் நாகேஸ்வரி**

தெல்லிப்பழை வறுத்தலை விளான் தேங்கிரானைப் பிறப்பிடமாகவும் அத்தியடி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரச்சந்திரன் நாகேஸ்வரி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு Ogden Funeral Homes,4164 Sheppard Ave E, Scarborough,ON M1S 1T3,Canada ஏன்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**திருமதி கந்தையா பகவதிப்பிள்ளை**



மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பகவதிப்பிள்ளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



**பசுபதிப்பிள்ளை சொர்ணலிங்கம்**


அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை சொர்ணலிங்கம் (இளைப்பாறிய தபாலதிபர்) கடந்த 13 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு 256,Kingston Road,Toronto,ON,M4L 1S7, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைப் பாதையை கைவிடுதல் அவசியம்

## பாரதப் பிரதமர் மோடி சுதந்திர தின உரையில் வலியுறுத்தல்



இந்தியாவின் 68 ஆவது சுதந்திர தினம் நேற்று நாடெங்கும் மிகவும் உற்சாகத்துடனும், கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டது.

தலைநகர் டில்லியில் காலை 7 மணிக்கு சுதந்திர தின கொண்டாட்டம் தொடங்கியது.

பிரதமர் நரேந்திர மோடி முதலில் மகாத்மா காந்தியின் நினைவிடத்துக்கு சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

காலை 7.20 மணிக்கு செங்



கோட்டைக்கு பிரதமர் நரேந்திர மோடி வந்தார். முப்படை தளபதிகள் அறிமுகத்துக்குப் பின்னர் பிரதமர் மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதுவரை செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்த பிரதமர்கள் எல்லோரும் குண்டு துளைக்காத கண்ணாடி கூண்டுக்குள் நின்றே தேசியக் கொடியை ஏற்றுவது வழக்கம். ஆனால் பிரதமர் மோடி அத்தகைய பாதுகாப்பு கூண்டு இல்லாமல் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார்.

முதல்தடவையாக செங்கோட்டையில் கொடி ஏற்றியுள்ள பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் பிறந்த ஒருவர் முதன்முதலாக கொடி ஏற்றி வைத்தவர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

பொதுவாகவே பிரதமர் நரேந்திர மோடி மிகச் சிறந்த பேச்சாற்றல் கொண்டவர் என்று புகழப்படுகிறார். ஆனால் அதையும் கடந்து அவரது சுதந்திர தின உரை உணர்ச்சிகரமான பேச்சாக இருந்தது. நாடு முன்னேற ஒவ்வொரு குடி மகனும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்பட வேண்டும் என்று தன் பேச்சில் மோடி வலியுறுத்தினார்.

இது தவிர பல்வேறு புதிய திட்டங்களையும் சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி அறிவித்தார். அவரது முதல் சுதந்திர தின உரை வருமாறு;

இன்று (நேற்று) நான் இங்கு இந்த நாட்டின் பிரதமர் என்ற முறையில் பேசவில்லை. நாட்டின் முதல் பணியாளர் என்ற அடிப்படையில் உங்களிடம் பேசுகிறேன். நாம் சுதந்திரம் பெற நமது முந்தைய பல தலைமுறையினர் உயிர்களையும் உடைமைகளையும் தியாகம் செய்துள்ளனர்.

ஏராளமானவர்கள் தங்கள் இளமையையும், வாழ்வையும் சுதந்திரப் போராட்டத்துக்காக அர்ப்பணிப்பு செய்தனர்.


அந்த தியாகிகளுக்கு முதலில் நான் வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று (நேற்று) நமக்கு தேசிய விழா. இந்த தேசிய விழாவை நாம் ஒவ்வொருவரும் நாட்டுப் பற்றை பேணி, பாதுகாத்து, போற்றுவதற்கு கிடைத்த ஒரு அருமையான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் நமது நாட்டுக்கு சிறப்பான சேவையாற்ற வேண்டும் என்ற உந்துதலைப் பெற வேண்டும்.

நமது முந்தைய அரசுகள், முன்னாள் பிரதமர்கள் எல்லோரும் நமது தேசத்தை மேம்படுத்தி உச்சத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

அவர்களது சேவைகளையும், வழிகாட்டுதல்களையும் போற்றி, நினைத்துப் பார்க்கிறேன். இந்த நேரத்தில் நமது பெரும்பான்மையை மட்டும் கருத்தில் கொள்ளாமல் எதிர்க்கட்சியினர் உட்பட மக்கள் ஒவ்வொருவரையும் சேர்த்து கொண்டு முன்னேற நாங்கள் விரும்புகிறோம்.

நமது நாடு அரசியல்வாதிகளாலோ அல்லது ஆட்சியாளர்களாலோ அல்லது அரசுகளாலோ கட்டமைக்கப் படவில்லை. நமது நாட்டில் உள்ள ஒவ்வொரு விவ



சாயி மற்றும் உழைக்கும் வர்க்கத்தால் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய கிராமத்தில், சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒருவர் இன்று இந்த தேசியக் கொடிக்கு கீழ் நின்று பேசுவது நமது சட்ட அமைப்பின் சிறப்பைக் காட்டுகிறது.

நமது நாட்டை மேம்படுத்த நாம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். ஒன்றுபட்டு சிந்திக்க வேண்டும். ஒன்று போல் நடக்க வேண்டும். இதன் மூலம் மற்றவர்களுக்கு முன உதாரணமாக திகழ்ந்து நாட்டை முன்னெடுத்துச் செல்ல உறுதி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் நமக்கு புது உந்துசக்தியை தருகிறது. நான் டில்லிக்கு வெளியில் வளர்ந்தவன். நான் டில்லிக்கு வந்தபோது ஒரு அரசுக்குள் டஜன் கணக்கில் பல அரசுகள் இருப்பதை, இயங்குவதை உணர்ந்தேன். அரசின் ஒரு துறை, மற்றொரு துறைக்கு எதிராக சண்டை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

சில சண்டைகள் சுப்ரீம் நீதிமன்றத்துக்கு கூட சென்று விட்டன. இப்படி அரசு துறைகளே ஒன்றோடு ஒன்று முட்டி மோதி சண்டை போட்டுக் கொண்டிருந்தால், நாம் எப்படி இந்தியாவை முன்னேற்றப் பாதைக்கு எடுத்துச் செல்ல முடியும்?

எனவே நமது அரசை வெறும் சட்ட உருவம் தரும் அமைப்பாக இல்லாமல், ஒன்றுபட்டு செயற்படும் ஒரு அமைப்பாக செயற்படுத்தவே நான் விரும்புகிறேன். இதற்கு நாம் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். அரசு துறைகள் ஒவ்வொன்றும் முழு

**மத கலவரம், இனக்கல வரத்தால் நாடெங்கும் பாதிப்பு ஏற்படுகிறது. 10 ஆண்டுகளுக்கு இத்தகைய கலவரம் இல்லாமல் இருந்தால், மக்கள் நல்ல நிலை உருவாவதை கண் எதிரில் பார்க்க முடியும். உங்கள் தோள்களில் துப்பாக்கியை ஏந்துவதற்கு பதில் கலப்பையை ஏந்திப் பாருங்கள், இந்த நாடு இரத்த சிவப்பு வண்ணத்தில் இருந்து வளர்ச்சிக்கான பச்சை வண்ணத்துக்கு மாறி விடும்.**

திறனுடன் செயற்படுவதை ஊக்கப்படுத்துவதன் மூலம் நமது நாட்டை மேம்படுத்த விரும்புகிறேன்.

ஆனால் நமது அரசு ஊழியர்களில் பலர் அத்தகைய உணர்வுடன் இல்லை. அரசு ஊழியர்கள் கால தாமதமாக பணிக்கு வருவது வருத்தம் அளிக்கிறது. அத்தகைய செய்திகளைப் படிக்கும் போது மகிழ்ச்சி ஏற்படவில்லை. அது செய்தியாகலாமா?

நாட்டு நலனுக்காக நாம் கொஞ்சமாவது செய்ய வேண்டும். நாட்டின் நலனை கருத்திற் கொள்ளாமல், இதில் நமக்கு என்ன கிடை



க்கும் என்று சுயநலத்துடன் செயற்படுவதை நாம் ஒவ்வொருவரும் கைவிட வேண்டும்.

பாலியல்பலாத்கார சம்பவங்கள் அவமானகரமானவை. பாலியல் பலாத்காரம் பற்றிய செய்திகளை கேள்விப்படும் போது வெட்கத்தால் நாம் தலைகுனிய வேண்டும். பெற்றோர் தங்கள் மகள்களை கட்டுப்படுத்துகிறார்கள். ஆனால் மகன்களை கட்டுப்படுத்த யாருக்கும் துணிவு வராதது ஏன்?

வன்முறை மூலம் நாம் எதுவும் பெற இயலாது. வன்முறை பாதையை தீவிரவாதிகளும், மாவோஸ்டுகளும் கைவிட வேண்டும். நாம் அனைவரும் சகோதரத்துவத்துடன் செயற்பட வேண்டும்.

மத கலவரம், இனக்கல வரத்தால் நாடெங்கும் பாதிப்பு ஏற்படுகிறது. 10 ஆண்டுகளுக்கு இத்தகைய கலவரம் இல்லாமல் இருந்தால், மக்கள் நல்ல நிலை உருவாவதை கண் எதிரில் பார்க்க முடியும். உங்கள் தோள்களில் துப்பாக்கியை ஏந்துவதற்கு பதில் கலப்பையை ஏந்திப் பாருங்கள், இந்த நாடு இரத்த சிவப்பு வண்ணத்தில் இருந்து வளர்ச்சிக்கான பச்சை வண்ணத்துக்கு மாறி விடும்.

அது மட்டுமல்ல நாட்டில் பால் இனத்திலும் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டுள்ளது. இதை கடவுள் ஏற்படுத்தவில்லை. நாம்தான் உருவாக்கி விட்டோம்.

பெண் குழந்தைகளை கருவிலே அழிப்பதால்தான் இன்று இந்த நிலை ஏற்பட்டுள்ளது. பெண் குழந்தைகளை கொல்லாதீர்கள். பெற்றோர்களையும், டாக்டர்களையும் இந்த விடயத்தில் கவனமாகவும், பொறுப்புடனும் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பெண் குழந்தைகளை கருவிலேயே கொல்லும் பழக்கம் 21 ஆம் நூற்றாண்டிலும் இந்தியாவில் ஒரு கரும் புள்ளியாக உள்ளது. இந்த தேசத்தின் மகள்கள் ஒவ்வொருவரும், இந்த நாடு முன்னேற கணிசமான பங்களிப்பைத் தருகிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. எனவே பெண்களை போற்றுங்கள். பெண்களுக்கு மரியாதை கொடுங்கள்.

நல்லாட்சி, வளர்ச்சி இரண்டும் தான் நமது நாட்டை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்ல முடியும். நமது அரசு பணியாளர்கள் ஒவ்வொருவரும் நாம் நமது நாட்டுக்கு சேவை செய்கிறோம் என்பதை உணர வேண்டும். சாதாரண கடை நிலை ஊழியரில் இருந்து அரசுத்துறை செயலாளர் வரை ஒவ்வொரு அரசும் பொருத்தமான தகுதி வாய்ந்த சிறப்புடன் பணியாற்ற வேண்டும்.

நமது நாட்டில் இன்னமும் ஏழை மக்கள் சேமிப்பு இல்லாமல் கீழ் மட்ட நிலையிலே உள்ளனர். அவர்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இதை கருத்திற் கொண்டு நாட்டில் உள்ள எல்லா ஏழை மக்களுக்கும் "ஜன தான்" திட்டம் என்ற பெயரில் வங்கி சேமிப்பு கணக்கு தொடங்க உதவிகள் செய்யப்படும்.

இந்த ஜனதான் திட்டத்தின் கீழ் ஏழைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் காப்பீடு செய்யப்படும். ஆட்சியில் மக்களின் பங்களிப்பு இருந்தால்தான் வெற்றி பெற முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இதன் மூலம் ஒவ்வொருவரையும் ஒருங்கிணைக்க முடியும்.

நமது நாட்டில் நிறைய இளைஞர்கள் கொண்ட பலம் உள்ளது. இந்த இளைஞர் பலத்தை பயன்படுத்திக் கொள்ள நாம் எப்போதாவது நினைத்து பார்த்ததுண்டா? இப்போதைக்கு இந்தியாவுக்கு திறமையான பணியாளர் படை தேவைப்படுகிறது.

இந்த நல்ல நேரத்தில் நமது நாட்டு இளைஞர்களை நான் அழைக்கிறேன். "வாருங்கள் இந்தியாவை உருவாக்குவோம்". ஒவ்வொரு இளைஞனும் நாட்டுக்கு பங்களிப்பை கொடுக்க வேண்டும்.

இளைஞர்களே.... உங்கள் பலத்தையும், வாய்ப்பையும் வீணாக்கி விடாதீர்கள். சொந்த தொழில் தொடங்குங்கள்.


இதன் மூலம் இந்தியா எந்த பொருளையும் உற்பத்தி செய்யும் நாடாக மாற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒவ்வொரு பொருளிலும் "மேட் இன் இந்தியா" என்ற முத்திரை இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இதற்கு இளைஞர்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது வேலை வாய்ப்பை உருவாக்கும். அதுதான் முன்னேற்றத்தைத் தரும். முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி எழுப்பிய, "ஜெய் சவான், ஜெய் கிஷான்" என்ற வாசகத்தின் உண்மையான பொருளை நாம் மறந்து விடக்கூடாது. முன்னேற்றத்துக்கான பெயரை இந்திய இளைஞர்கள் கொடுத்துள்ளனர். நாம் ஒன்று பட்டு செயற்பட வேண்டும்.

பொருட்களை இறக்குமதி செய்வதை விட உலகுக்கு எல்லா பொருட்களையும் நாம் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற எண்ணம் வர வேண்டும். இந்தியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் பிராண்ட் பேண்ட் இணைப்பு கொடுத்து இந்தியாவை டிஜிட்டல் இந்தியா நாடாக மாற்ற வேண்டும்.

இந்த நேரத்தில் ஒவ்வொரு இந்தியனும் சுத்தமான இந்தியாவை உருவாக்குவோம் என்ற உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தேசத் தந்தை மகாத்மா காந்



திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவர் பிறந்த நாளான ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி முதல் சுத்தமான இந்தியாவுக்கான பிரசாரம் நாடெங்கும் தொடங்கப்படும்.

நாடெங்கும் கிராமங்கள் மேம்பட வேண்டும். கழிவறைகள் இல்லாத கிராமமே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். எம்.பி.க்கள் தங்கள் தொகுதி வளர்ச்சி நிதியை இதற்கு பயன்படுத்த வேண்டும்.

நாட்டின் வளர்ச்சிக்காக திட்டக் கமிஷன் புதிய கழகத்துடன் சேர்த்து மாற்றப் படும். வறுமை ஒழிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதற்காக தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பும் பெறப்படும்.

இந்திய சுதந்திரத்தை உலகம் முழுவதும் கொண்டாடி வரும் நமது நாட்டு மக்கள் அனைவருக்கும் மீண்டும் என் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவிதது‌க் கொள்கிறேன். ஜெய்ஹிந்த். வந்தே மாதரம்.

இவ்வாறு பிரதமர் மோடி உரையாற்றினார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவன் தனக்குத்தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவனே சுதந்திர மனிதன்.
- ஓர் அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நாங்கள் கடைப்பிடித்தால் மற்றவர்களும் பின்பற்றுவர்

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஒரு தாய் தன் மகனை அழைத்துச் செல்கின்றார். சுவாமி! இவன் என்மகன். எப்போது பார்த்தாலும் இனிப்புக் களை சாப்பிட்ட வண்ணமுள்ளான். நீங்கள்தான் இவனுக்கு ஏதாவது ஒருவழி செய்ய வேண்டும் என்று சுவாமியை மன்றாடினார் அந்தத் தாய்.

எல்லாவற்றையும் கேட்ட சுவாமி இராமகிருஷ்ணர், தாயே! உன் மகனை அடுத்தவாரம் என்னிடம் அழைத்துவா என்றார். சுவாமி இவ்வாறு கூறியதும் அந்தத் தாய் தன் மகனோடு வீடு செல்கின்றார். மீண்டும் ஒரு வாரம் கடந்து சுவாமியிடம் செல்கின்றார்.

அந்தச் சிறுவனைப்பார்த்த சுவாமிகள்; மகனே! இனிமேல் நீ இனிப்புச்சாப்பிடலாகாது என்றார். அதற்கு அந்தச் சிறுவனும் ஆம் சுவாமி என்றான்.

தாயே! உன் மகனை அழைத்துச் செல்லலாம். அவனுக்கு அறிவுரை கூறியுள்ளேன். இனிமேல் அவன் இனிப்புச் சாப்பிடமாட்டான் என்று நம்புகிறேன் என்றார் சுவாமி.

சுவாமி இவ்வாறு கூறியதும் அந்தத் தாய்க்கு கடும் கோபம் வந்தது. ஏன் சுவாமி இதனை அன்றைக்கே நீங்கள் கூறியிருக்கலாமே! அன்று நான் வந்தபோது இதைத்தான் நீங்கள் கூறுவதாக இருந்தால் அதனைச் செய்யாமல் ஒருவாரம் காத்திருந்து அலைக்கழிந்து இன்னுமொரு தடவை வர வேண்டிய தேவை இல்லையல்லவா? என்றார் அந்தத்தாய்.

தாயின் ஆதங்கத்தைப் புரிந்துகொண்ட சுவாமி இராமகிருஸ்ணர்; எந்தச் சலனமும் இன்றி, பெண்ணே! நீர் கூறுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால் உன் மகனை நீ முதலாவது தடவை என்னிடம் அழைத்து வந்தபோது இனிப்புச் சாப்பிடும் பழக்கம் என்னிடமும் இருந்தது. நான் இனிப்புச் சாப்பிட்டுக்கொண்டு; அந்தச் சிறுவனுக்கு, இனிப்புச் சாப்பிடாதே என்று புத்திமதி கூறுவது எந்தளவுக்கு நியாயமானது?

எனவே இனிப்புச்சாப்பிடும் பழக்கத்தை முதலில் நான் கைவிட வேண்டும். இந்த ஒரு வாரத்திற்குள் இனிப்புச் சாப்பிடும் பழக்கத்தை நான் முழுமையாக கைவிட்டுவிட்டேன்.

இப்போது அந்தச் சிறுவனுக்கு புத்திமதி சொல்லும் தகைமை எனக்குண்டு. அதனால்தான் ஒருவாரம் கழித்து மீண்டும் வருமாறு கூறவேண்டியிருந்தது என்றார். சுவாமியின் செயல்கண்டு அனைவரும் வியந்தனர்.

எனவே நாம் யாருக்காவது புத்திமதி கூறுவதற்கு முன்னதாக அது தொடர்பில் நாங்கள் சரியாக இருக்கின்றோமா என்பதை உறுதி செய்வது அவசியம். இதைத்தான் சுவாமி இராமகிருஷ்ணர் தன் செயல் மூலம் இந்த உலகிற்கு உப தேசிக்கின்றார்.

நல்லூர் மகோற்சவத்தில் பங்கேற்பவர்கள் சைவத் தமிழ்ப்பண்பாட்டை பேண வேண்டும் என்ற கோரிக்கைகள் பலமாக, பல தரப்பாலும் விடுக்கப்பட்டு வருகின்றது.

ஆசாரக் கடைப்பிடிப்புகளில் கடந்த காலங்களை விட இந்த ஆண்டு கணிசமான முன்னேற்றம் உண்டு என்பதையும் இவ்விடத்தில் கூறித்தான் ஆக வேண்டும்.

அதிலும் மஹோற்சவத்தில் பங்கேற்கும் வெளிநாட்டவர்களுக்கு சால்வை, வேட்டி என்பவற்றைக் கொடுத்து அவர்களை அணியச்செய்யும் நல்லதொரு பணியை தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை என்ற அமைப்பு செய்து வருவது வரவேற்கத்தக்கது.

எனினும் வெளிநாட்டவர்கள் சால்வை கட்டிக் கொண்டு நல்லூர்க்கந்தனின் மஹோற்சவத்தில் பங்கேற்க, எங்களில் சிலர் அவர்களின் ஆடைக்கோலத்தில் வருவது வேதனைக்குரியது.

எங்களின் ஆடைகளை நீங்கள் அணிந்து கொண்டு உங்களுடைய வேட்டிக் கலாசாரத்தை பின்பற்றுமாறு எங்களுக்குக் கூறுவது எந்தளவில் நியாயம் என்று வெளிநாட்டவர்கள் கேள்வி எழுப்பினால் அதற்கு யாராலும் பதில் கூற முடியாது.

எனவே அன்புக்குரியவர்களே! நல்லூர்க் கந்தப் பெருமான் எங்கள் தமிழ்த் தலைவன். அவனின் திருவீதியில் நடந்தாலே பெரும்பேறு கிட்டும். ஆகையால் சைவ ஆசாரத்துடன் வேட்டி சால்வை அணிந்து எங்கள் உயரிய பண்பாட்டை நாங்கள் கடைப்பிடிப் போம். அப்போது மற்றவர்களும் நிச்சயம் அதனைப்பின் பற்றுவார்கள்.

# நீர்க்காகம் பயிற்சி நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

படைத்தரப்பு ஆண்டுதோறும் நடத்திவரும் நீர்க்காகம் பயிற்சி நடவடிக்கைகள் அடுத்த மாதம் வன்னி, மன்னார், மாத்தளை மற்றும கிழக்குப் பகுதிகளில் இடம்பெறவுள்ளது.

படைத்தரப்பால் ஐந்தாவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நீர்க்காகம் போர்ப்பயிற்சி - 4 அடுத்த மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்படைகளையும் சேர்ந்த 2500 படையினர் மற்றும் வெளிநாட்டுப் படையினர் இந்தப் போர்ப் பயிற்சியில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் போர்ப்பயிற்சிக்கு பிரிகேடியர் ஏ.எம்.ஆர்.தர்மசிறி கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், படைத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவின் மேற்பார்வையின் கீழ் இந்தப் போர்ப்பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.

படைத்தரப்பின் கொமாண்டோ படைப்பிரிவு மற்றும் சிறப்புப் படைப் பிரிவு என்பன வான் மற்றும் கடற்படையுடன் இணைந்து இந்தப் போர்ப்பயிற்சியில் ஈடுபடவுள்ளன.

இதனிடையே படைத்தரப்பு ஆண்டு தோறும் நடத்தி வரும் படைத்துறைக் கருத்தரங்கு நாளை மறுதினம் கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

கொழும்பு கலதாரி நட்சத்திர விடுதியல் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை இடம பெறவுள்ள இக்கருத்தரங்கு, இலங்கை எழுச்சி பெறுவதற்கான சவால்கள் என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது.

இந்த மூன்று நாள் கருத்தரங்கில் படைத்தரப்பின் மூத்த அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# மோ.சைக்கிள் விபத்து; இரு சிறுவர் படுகாயம்

(மானிப்பாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வயலுக்குள் பாய்ந்ததில் அதில் பயணித்த இரு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை யாழ்.ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் இடம்பெற்றது. இதில் பாடுகாயமடைந்த சிறுவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வே.துவாரகன் (வயது 16), ஆர்.விவேக் (வயது 16) ஆகிய இருவருமே படுகாய மடைந்துள்ளனர். சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (செ-6,23)

## நல்லூரில் கார்த்திகைத் திருவிழா இசை அர்ச்சனை ஒத்திகை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு வழமை போல் மாலை சுவாமி வீதிவலம் வந்ததும் உள்வீதியில் எட்டுத்திசைகளிலும் இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

இவ் இசை அர்ச்சனை நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்பும் இசை வாத்திய கலைஞர்களுக்கான ஒத்திகை நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (6)

# பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆனைப்பந்தி ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா பாட நெறிகளை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் கல்லூரி அதிபர் லயன் ஜெ.ஜெயச்சந்திரமூர்த்தி றஜிவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் போக்குவரத்து மீன்பிடி கிராமிய அபிவிருத்தி வர்த்தக துறை அமைச்சர் பி.டெனீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், வேலணைப் பிரதேச சபை தவிசாளர் சின்னையா சிவராசா, வட மாகாண சபை உறுப்பினர்களான சந்திரலிங்கம் சுகிர்தன், விந்தன் கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் ஆசி உரையினை சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ வாசுதேவக் குருக்களும் வண்பிதா ஜோக்கப் நீக்லஸ் அடிகளாரும், யாழ்.ஒஸ்மானியக் கல்லூரி அதிபர் மௌலவி முபாரக்கும் வழங்கவுள்ளனர் என கல்லூரியின் பணிப்பாளர் லயன் டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார். (செ)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**16.08.2014 இற்கான வினா**
**ஓம் நமசிவாய எனும் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்புக்கள் எவை?**
**15.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**
**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இயற்றிய சைவ வினா- விடையில் குறிப்பிடப்பட்டிருக்கும் புண்ணியங்களானவை யாவை?**
கடவுளை வழிபடல், தாய்,தகப்பன், உபாத்தியார், குரு முதலான பெரியோரை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்ந்நன்றி அறிதல் முதலானவை.

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



சுவாமி விவேகானந்தர் இதனை அடிக்கடி இளைஞர்களுக்கு அறிவுறுத்துவார். இரண்டாவதாக வருவது பிரணாமய கோஷா மூச்சை உள்ளிழுப்பது நன்கு ஆழமாக இழுக்கவேண்டும். மேலோட்டமாக சுவாசிக்காதீர்கள். மூன்றாவதாக கர்மமய கோஷா.இயன்றவரையில் யாருடைய மனமும் புண்படும்படி நடக்காதீர்கள். நீங்கள் பிறருக்கு மனோகாயம் ஏற்படுத்தினால் உங்களுக்கு கர்மா வந்து சேருகிறது. இந்த கர்மா பூமியில் முழுவதுமாக யாரையும் மனோகாயம் ஏற்படுத்தாமல் இருந்து முழுவதுமாக கர்மாவை தவிர்ப்பது இயலாத காரியம்தான். ஒரு அவதார புருஷரும் கூட இதற்கு விதிவிலக்கல்ல இயன்றவரை யாரையும் மனோகாயப்படுத்தாமல் இருக்க பழகிக் கொள்ளுங்கள்.

# முதியோர் சங்க அமைப்பு கூட்டம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பிரதேச மட்ட முதியோர் சங்கம் அமைப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவில் இருந்தும் இரண்டு முதியோர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

இச் சங்கத்தில் இணைய ஆர்வமுள்ள முதியோர்கள் இக் கூட்டத்தில் பங்குகொள்ள முடியும் என கரவெட்டி பிரதேச செயலர் எஸ.சிவசிறி அறிவித்துள்ளார்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உண்மையான இன்பம்



- ஆன்மீக வழியில் தேடும் இன்பமே உண்மையான இன்பம்.
- கடவுள் நம்மோடு எப்போதும் இருக்கிறார். ஆனால், நம் கண்ணுக்கு புலனாவதில்லை.
- குறிக்கோளுக்குரிய முக்கியத்துவத்தை, அதை அடையும் பாதைக்கும் கொடுங்கள்.
- எதையும் கைம்மாறு கருதாமல் செய்ய முயலுங்கள். பயன் கருதி செய்யும் எதுவும் உதவியாகாது.
- கண்ணில் காணும் அனைத்தையும் கடவுளின் அம்சமாகவே போற்றுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவற்கட்டு மகாத்மா வி.கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## மேரிஸ், நீக்கிலஸ் இறுதிப்போட்டிக்கு தகுதி

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் அணிக்கு 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியும், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியும் தகுதி பெற்றுள்ளன.



சுற்றுத் தெடரின் ஆட்டங்கள் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த வாரம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில், காளியாம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறைசென்.மேரிஸ்விளையாட்டுக்கழக அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இருஅணிகளுக்கிடையிலானஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக் கிலஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (க)

# யாழ்.அணி வெற்றி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணி மோதிக்கொண்டது . இதில் யாழ் உதைபந்தாட்ட லீக் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## இன்றைய போட்டி

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



திருநெல்வேலி பாற்பண்ணை கம்பன் முன்பள்ளியின் விளையாட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் இடம்பெற்றபோது. (23)





# ஹொக்கி போட்டி முடிவுகள்

யாழ்.பல்கலைக்கழக ஹொக்கி அணியும் பல்கலைக்கழக பழைய மாணவர் சமூகமும் இணைந்து நடத்தும் பல்கலைக்கழக மற்றும் பல்கலைக்கழக சமூகங்களுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவர் அணி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயிலும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி பழைய மாணவர் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அண்மையில்நடைபெற்ற போட்டியில் யாழ்.பல் கலைக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக பழைய மாண வர் அணி மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல்பாதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவர் அணி வீரர் கோபி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு தனது அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து இரண்டாம்பாதியாட்டத்தில் அவ்வணியைச் சேர்ந்த ராஜேஸ் கோலினைப் பெற்றுக் கொடுத்தார்.


இறுதிவரை பல்கலைக்கழக அணியால் கோல் போட முடியாமல் போக இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவர் அணி வெற்றி பெற்றது.

இடம்பெற்ற மற்றொரு போட்டியில் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி பழைய மாணவர் அணியை எதிர்த்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயிலும் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி பழைய மாணவர் அணி மோதியது.

போட்டியின் ஆரம்பத்தில் இருந்தே ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி பழைய மாணவர் அணி முதல்பாதியாட்டத்தில் ஒரு கோலினையும் இரண்டாம் பாதியாட்டத்தில் அடுத்தடுத்து இரண்டு கோலினையும் போட்டது.

இக்கோல்களை இவ்வணியைச் சேர்ந்த ஜெயராஜ், லக்ஷ்மன், நிசாந்தன் ஆகியோர் பெற்றுக்கொடுத்தனர். இறுதிவரை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி பழைய மாணவர் அணியினரால் கோல் போட முடியாமல் போக இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயிலும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி பழையமாணவர்அணிவெற்றி பெற்றது. (க)


# சாதனை படைத்தார் ரோஜர் பெடரர்



சின்சினாட்டி ஓபன் சர்வதேச மாஸ்டர்ஸ் டெனிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2 ஆவது சுற்றில் 3 ஆம் நிலை வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 7:6 (7:4), 5:7, 6:2 என்ற செட் கணக்கில் கனடாவின் வாசெக் போஸ்பிசிலை 2 மணி நேரம் போராடி தோற்கடித்தார்.

இதன் மூலம், சம்பியனாகும் வீரருக்கு 1000 தர வரிசை புள்ளிகளை அளிக்கும் ஏ.டி.பி. டூர் மாஸ்டர்ஸ் பந்தயத்தில் 300 ஆவது வெற்றியை பெற்ற முதல் வீரர் என்ற பெருமையை பெடரர் பெற்றார். (க)

# ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வி



அமெரிக்காவில் சின்சினாட்டி ஓபன் சர்வதேச மாஸ்டர்ஸ் டெனிஸ் போட்டி நடந்து வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நம்பர் 1 வீரர் செர்பியாவின் ஜோகோவிக் 3 ஆவது சுற்றில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். ஸ்பெயின் வீரர் டாமி ராபர்டோவிடம் 7:6 (6), 7:5 என்ற செட் கணக்கில் தோற்று கால் இறுதி வாய்ப்பை இழந்தார்.

சமீபத்தில் நடந்த ரோஜர்ஸ் டெனிஸ் போட்டியிலும் ஜோகோவிக் தோல்வியை சந்தித்து இருந்தார். கால் இறுதிக்கு பெடரர், வாவ்ரிங்கா. (சுவிட்சர்லாந்து), ஆன்டி முர்ரே (இங்கிலாந்து), ரோனிக் (கனடா) ஆகியோர் தகுதி பெற்றனர். (க)

# உலக காற்பந்து தர வரிசையில் தொடர்ந்தும் முதலிடத்தில் ஜேர்மனி




உலக காற்பந்து அணிகளின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச காற்பந்து சம்மேளனம் (பிபா) நேற்று அறிவித்தது.

இதன்படி உலக கோப்பையை வென்ற ஜேர்மனி அணி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

ஆர்ஜென்டினா அணி 2 ஆவது இடத்திலும், நெதர்லாந்து அணி 3 ஆவது இடத்திலும், கொலம்பியா அணி 4 ஆவது இடத்திலும், பெல்ஜியம் அணி 5 ஆவது இடத்திலும், உருகுவே அணி 6 ஆவது இடத்திலும் நீடிக்கின்றன. ஸ்பெயின் அணி 8 ஆவது இடத்தில் இருந்து 7 ஆவது இடத்துக்கு முன்னேறி பிரேசிலுடன் அந்த இடத்தை பகிர்ந்து கொண்டது. சுவிட்சர்லாந்து அணி 9 ஆவது இடமும், பிரான்ஸ் அணி 10 ஆவது இடமும் வகிக் கின்றன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா மீண்டும் சொதப்பல்



இங்கிலாந்து எதிரான ஐந்தாவது டெஸ்டில் முதல் நாள் முடிபில் இந்திய அணி மீண்டும் தனது சொதப்பல் ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் கெண்ணிங்டன் ஓவல் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

இந்திய அணியில், ஜடேஜாவுக்கு பதிலாக ஸ்டுவார்ட் பின்னி சேர்க்கப்பட்டுள்ளார். அதேபோல் பங்கஜ் சிங்கிற்கு பதிலாக இஷாந்த் சர்மா இடம் பெற்றார்.

இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி அணித்தலைவர் குக் தனது அணி முதலில் பந்து வீசவும் என தெரிவித்தார்.

இதைதொடர்ந்து இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்த போட்டியிலும் இங்கிலாந்து அணி பந்து வீச்சை எதிர்கொள்ளாமல் இந்திய வீரர்கள் வரிசையாக நடையை கட்டினார்.


இதில் இந்திய அணி 148 ஓட்டங்களை மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இந்திய அணியில் அணித் தலைவர் தோனி 82 ஓட்டங்களும், முரளி விஜய் 18 ஓட்டங்களும், அஷ்வின் 13 ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து வீரர்களின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் அடுத்து களம் இறங்கிய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்கங்களில் விக்கெட்டை இழந்தனர்.

இதில் இங்கிலாந்து வீரர்கள் வோக்ஸ் 3, ஜோர்டன் 3, அன்டர்சன 2, பிரோட் 2 விக்கெட் எடுத்தனர்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்து இங்கிலாந்து முதல் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 62 ஓட்டங்களுடனும் றொபன்சன் 33 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். போட்டியின் இரண்டாம் நாள் இன்றாகும். (க)

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் வலுவான நிலையில் இலங்கை



ரங்கன ஹேரத்தின் துல்லியமான பந்துவீச்சின் காரணமாக இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது.

போட்டியில் முதல் இன்னிங்ஸில் இலங்கை பெற்ற 320 ஓட்டங்களுக்கு பதிலளித்தாடும் பாகிஸ்தான் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 244 ஓட்டங்களை நேற்றைய இரண்டாம் நாள் ஆடடநேர முடிவில் பெற்றிருக்கிறது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 261ஓட்டங்களுடன் இலங்கை அணி முதல் இனனிங்ஸை நேற்று தொடர்ந்தது.

தம்மிக பிரசாத் 4 ஓட்டங்களுடனும், ரங்கன ஹேரத் ஓட்டமின்றியும் ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

மேலும் 23 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் தம்மிக பிரசாத் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரங்கன ஹேரத் மற்றும் சானக வெலகெதர ஜோடி கடைசி விககெட்டில் 36 ஓட்டங்களைப்பகிர்ந்தது.

ரங்கன ஹேரத் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சானக வெலகெதர 27 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல பெற்றார்.

இலங்கை அணி தனது முதல் இன்னிங்சுக்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 320 ஓட்டங்களை எடுத்தது. பந்துவீச்சில் ஜுனைட் கான் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இது டெஸ்ட் போட்டிகளில் அவர் 5 விக்கெட்டுகளை கைப்பற்றிய ஐந்தாவது சந்தர்ப்பமாகும்.

இதேவேளை, ஓய்வுபெறும் டெஸ்ட் போட்டியில் விளையாடும் மஹேல ஜெயவர்த்தன களத்தடுப்புக்காக களமிறங்கிய போது அவருக்கு இளம் வீரர்களால் வரவேற்பளிக்கப்பட்டது.

தொடர்நது தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு குரம் மன்சூர் - அஹமட் ஷெஷாட் இணை ஆரம்பத்தை வழங்கியது.

இருவரும் இணைந்து 47 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்த வேளையில் முதல் விக்கெட்டாக குரம் மன்சூர் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அஹமட் ஷெஷாட் தனது இரண்டாவது டெஸ்ட் அரைச்சதத்தைக் கடந்தார்.

அசார் அலி 32 ஓட்டங்களுடனும் சிறப்பாக ஆடிய அஹமட் ஷெஷாட் 58 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

யூனிஸ் கான், அணித் தலைவர மிஸ்பா உல்ஹக் ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் 140 ஓட்டங்களுக்குள் ஐந்து விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும், சப்ராஸ் அஹமட் மற்றும் அசாத் ஷாபிக் ஜோடி 6-வது விககெட்டுக்காக 93 ஓட்டங்களைப் பகிர்ந்து ஆறுதல் அளித்தது.

சப்ராஸ் அஹமட் தனது நான்காவது டெஸ்ட் அரைச்சதத்தைக் கடந்தார். அசாத் ஷாபிக் 42 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

நேற்றைய 2-ம் நாள் நிறைவின் போது பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களை எடுத்துள்ளது.

சப்ராஸ் அஹமட் 66 ஓட்டங்களுடனும், அப்துர் ரெஹ்மான் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். பந்துவீச்சில் ரங்கன ஹேரத் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இது டெஸ்ட் போட்டிகளில் அவா 5 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய 20 ஆவது சந்தர்ப்பமாகும்.

போட்டியின் 3-ம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# நிலக்கடலை சிக்கி குழந்தை உயிரிழப்பு

(கொழும்பு)

கம்பஹா உடகம்ப்ல பகுதியில் நிலக் கடலை தொண்டையில் சிக்கியதில் ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாயாரால் உணவிற்காக வைத்திருந்த நிலக் கடலையை, குழந்தை உட்கொள்ள முயற்சித்தபோது நேற்று முன்தினமிரவு இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்துள்ள குழந்தையின் சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் நேற்று மாலை கம்பஹா வைததியசாலையில் முன்னெடுக்கப்பட்டு பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-11)

# கறுப்புப்...

கறுப்புப் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

1968-ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் 45-ம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் இவர்கள் கறுப்புப்பட்டியலிடப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு கறுப்புப் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

தம்மை கறுப்புப் பட்டியலிலிருந்து நீக்குமாறு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்டவர்களின் தடையை நீக்கும் அதிகாரம் வெளி விவகார அமைச்சிற்கு காணப்படுவதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (செ-11)

# ஞானசார தேரருக்கு...

னும் குரலெழுப்பினால் அவர்களை முறியடிப்போமென்று ஞானசார தேரர் சூளுரைத்துள்ளார். அவருக்கு இந்தளவு அதிகாரத்தை இந்த அரசாங்கம் வழங்கியுள்ளது.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று முன்தினம கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

அமைச்சர் ராஜித சேனரத்னவிற்கு எதிராக இன்று பொது பல சேனாவினால் அவதூறுகள் பரப்பபபடுகின்றன. இதற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு உடையது.

ஏனெனில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உட்பட பல இடதுசாரிகள் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமைக்கு எதிரான கருத்தை உடையவர்களாக உள்ளனர்.

அதே கருத்தையுடைய அமைச்சர்கள் பலர் ஒன்றிணைந்து ஒரு அமைப்பாக அரசாங்கத்திற்குள்ளேயே செயறபடுகின்றனர். இதில் ராஜிதவும் உளளடங்குகின்றார்.

அதனால்தான் அவருக்கு எதிராக அரசாங்கம் ஞானசார தேரர் மூலம் அவதூறுகளை பரப்பி வருகின்றது.

மேலும், ஞானசார தேரர் நோர்வே நிதி உதவியுடனேயே தனது அராஜகங்களை அரங்கேற்றி வருகின்றார என்பது தெட்டத்தெளிவாகிவிட்டது.

அத்துடன் லங்கா ஏ நியூஸில் தனது காதலியுடன் டெனிம் அணிந்த நிலையில் ஞானசார தேரர் உள்ள படம் பிரசுரமாகியுள்ளது.

உண்மையில் பௌத்த துறவிகள் பெண்களுடன் தொடர்பற்று இருபபர். ஆனால் ஞானசாரருக்கு காதலி உள்ளார். வாகனம் ஓட்டுனர் மது பானம் உட்பட அனைத்து தீயப்பழக்கங்களையும் கொண்டவராகவுள்ளார்.

இவர் தொடர்ந்து தனது செயறபாடுகளை முன்னெடுத்தால் 99.9 வீதமான சிங்கள பௌத்தம் அழிவை நோக்கி செல்லும் என்பதில் ஐயமில்லை என அசாத் சாலி தெரிவித்தார். (செ-11)




மகாபாரதத்தில் கர்ணனின் வரலாறு

40 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும்

ராஜா திரையரங்கில்

வெற்றி நடைபோடுகிறது

பாடசாலை மாணவ மாணவிகளுக்கு

விசேட சலுகையில் டிக்கெட்டுக்கள்

◆ குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்

(டிஜிற்றல் சவுண்ட்)

(C-8206)

உலக நடிகர் சிவாஜி ரசிகர்கள் (யாழ். மாவட்டம்)


# இராணுவத்தில் இணைந்...

தில் இணைந்துள்ளார். இவருக்கு 6 வயதில் ஒரு மகளும் உள்ளார்.

இந்நிலையில் கடந்த சிலதினங்களுக்கு முன்னர் இராணுவ பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, குறித்த பெண்ணுக்கு உடல் சுகவனம் உணடானதாக தெரிவித்திருக்கும் இராணுவத்தினர், பின்னர் இவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதித்திருந்ததாகவும், அங்கே சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

குறித்த பெண்ணின் சடலம் நேறறையதினம் ஒட்டுசுட்டான்- செல்வபுரம் கிராமத்திலுள்ள அவருடைய கணவர் மற்றும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் இராணுவ மரியாதைகளுடன் செல்வபுரம் கிராமத்திற்கு அருகிலுள்ள செல்வபுரம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் நிறைவிலும், இவ்வருடத்தில் ஆரம்பத்திலும் இராணுவத்தில் பல பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில், அவர்களுக்கு பயிற்சியின்போது கடுமையான தாக்குதல்கள் நடத்தப் படுவதாகவும், துன்புறுத்தல்கள் உணடாக்கப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பெண்ணின் மரணம் சம்பவித்துள்ளதுடன், உயிரிழந்த பெண்ணின் சடலம் அவசரமாக அடக்கம் செய்யப்பட்டும் உள்ளது. (செ-11)

# மன்னார்...

களிலிருந்தும் 6 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் மறைமாவட்டத்தில் புனித யாத்திரை தலமாக விளங்கும் மடு அன்னை தேவாலயத்தில் வருடந்தோறும் நடைபெறுவது போன்று இம்முறையும் வெகு சிறப்பாக இந்த விழா கொண்டாடப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆணடகையின் தலைமையில் இடம் பெற்றது.

கர்தினால் அதிமேதகு மல்கம் ரஞ்சித் ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க, அநுராதபுர ஆயர் மேதகு நேபட் அன்றாடி ஆண்டகை கொழும்பு இளைப்பாறிய பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் உட்பட இத்தாலியன் ஆயர் மன்றத்தின் பிரதிநிதிகளாக மடுவிற்கு வருகை தந்திருந்த அருட் பணியாளர்கள் மென்சின்நோர் லேனாட் டீ முருகோ, மொன்டினியோ அன்ரனியோ அமராத்தி ஆகிய அடிகளாருடன் நூற்றுக்கு மேற்பட்ட அருட் பணியாளர்களும் திருவிழா திருப்பலியில் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங். இராணுவ...

வக் கருத்தரங்கை நடத்தவிருக்கிறது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள இந்திய தலைவர்களுக்கும் இந்திய இராணுவ அதிகாரிகளுக்கும் இலங்கை அரசு அழைப்பு விடுத்திருக்கிறது.

60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் தமிழர்களின் குரல்வளையை நெரித்தும் தமிழக மீனவர்களை வேட்டையாடியும் தன் அரக்கத்தனத்தைக் காட்டிவரும் இலங்கை இராணுவம் ஈழப்போர் நிகழ்ந்த போது நடத்திய மனிதாபிமானமற்ற இனவெறிக் கொடூரத்தை எவராலும் மறக்க முடியாது.

இதை மறைக்கும் விதமாகவும் தங்களுக்குத் தாங்களே புகழ் பாடும் விதமாகவும் இராணுவக் கருத்தரங்கை நடத்தி முழுப்பூசணியையும் சோற்றில் மறைக்கப் பார்க்கிறது.

இத்தகைய கொடூரங்களும் கொடுமைகளும் போதாது என நினைத்து இந்தியப் பிரதமரையும் எட்டு கோடி தமிழ் மக்களின் முதல்வராக விளங்கும் தமிழக முதலமைச்சரையும் கேலிச்சித்திரமாக்கி தங்களின் இராணுவ இணையதளத்தில் வெளியிட்டிருக்கிறார்கள்.

மாபலம் பொருந்திய இந்திய தேசத்தையே இழிவுபடுத்தும் ஈனச் செயல் அல்லவா இது? வெறுமனே மன்னிப்பு கேட்பதால் இந்த மாபெரும் கேவலம் மறக்கப்பட்டு விடுமா?

இந்தக் கேலிச்சித்திர அசிங்கத்தையும் இலங்கை அரசு மீது இனவெறி நடவடிக்கைகள் தொடங்கியிருக்கும் நிகழ்வையும் சொல்லி இலங்கை இராணுவக் கருத்தரங்கில கலந்து கொள்ளக் கூடாது.

மீறி எவரேனும் அந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டால் அது இந்த தேசத்தையும் ஒவ்வொரு தமிழர்களின் உணர்வுக ளையும் மிதிக்கும் செயலாகவே இருக்கும்.

இலங்கை அரசின் இராணுவக் கருத்தரங்கில் இந்தியா சார்பில் எவரும் கலந்து கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தி நாளை 17-ம் திகதி சென்னை லயோலா கல்லூரி அருகே இருக்கும் இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நாம் தமிழர் கட்சி நடத்த இருக்கிறது.

இவ்வாறு சீமான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-11)

## கடற்...

படையின் நடவடிக்கைத் தளபதி றியர் அட்மிரல் நீல்றொசாரியோ தலைமையிலான 5 கடற்படை அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தியாவின் சார்பில் கடற்படையின் வெளிநாட்டு ஒத்துழைப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கான உதவித் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ஆர்.பி. பண்டிட் தலைமையிலான 16 பேர் கொண்ட கடற்படை அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது மற்றும் பயிற்சிகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், படை நடவடிக்கைகளின் போது இரு நாட்டுக் கடற்படைகளும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. (செ-11)

## போர்க்குற்ற செயல்கள்...

வீதம் சரியானதல்ல. அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ள பலர் முயற்சித்து வருகின்றனர்.

இதனால் அரசாங்கத்தை பாதுகாக்கக் கூடியவர்களிடமிருந்தே ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும். அரசாங்கத்தை நெருக்கடியில் ஆழத்தும் தரப்பினரிடம் உதவி பெற்றுக கொள்ள முடியாது. மங்கள சமரவீர நாட்டின தலைவர்களை தண்டிக்க விரும்புகின்றார்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவின் முன்னிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சாட்சியமளிக்க முடியும். ஆனால் அவர்கள் எவ்வாறான விடயங்கள் பற்றி சாட்சியமளிக்கின்றார்கள் என்பதே முக்கியமானது. அவர்களின் சாட்சியத்தின் உள்ளடக்கத்தின் அடிப்படையிலேயே நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டவிரோதமான முறையில் பாகிஸ்தானியர்கள் நாடு கடத்தப்படவில்லை. பாகிஸ்தான் அரசாங்கத்தை நெருக்கடியில் ஆழ்த்தும் நோக்கில் சிலர் இலங்கைக்குள் பிரவேசிக்கின்றனர். இவ்வாறானவர்களையே அரசாங்கம் நாடு கடத்துகின்றது என கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (செ-11)

## கைக்குண்டு...

கிழமை மாலை இரண்டு கிரனேட்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில்உள்ள அலகல்ல சீரவேகம குளத்தை சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் பையில் சுற்றப்பட்டிருந்த இரண்டு கிரனேட்டுக்களை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு பொலிஸாருடன் வந்த விசேட அதிரடிப்படையினர் நீதிமன்றின் உத்தரவுக்கமைய இந்த இரு கைக்குண்டுகளையும் மீட்டு செயலிழக்கச் செய்தனர்.

மேலும், யாழ்ப்பாணம், எழுதுமட்டுவாள் பகுதியிலுள்ள தனியார் காணியொற்றில் இருந்தும் கைக்குண்டொன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு மீட்கப்பட்டதாக கொடிகாமம் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தனர். காணி உரிமையாளர், காணியைத்வியாழக்கிழமை மாலை துப்பரவு செய்யும் வேளை யில் நிலத்தில் புதையுண்ட நிலையில கைக் குண்டு இருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளார்.

அதனையடுத்து, இராணுவத்தினருடன் சென்று மேற்படி கைக்குண்டை மீட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்(செ-11,250)

## பிரபாகரனின்...

பாறைகளாலான கதவுகளால் மூடியதாக கூறப்படும் பிரித்தானியாவின நடவடிக்கையை ஜனாதிபதி இதன்போது ஞாபகப்படுத்தினார்.

வலப்பனை சத்தானந்த வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிரிகளை உயிருடன் கொல்லும் மனித உரிமை நியாயத்தை பிரித்தானியாவே பிரபாகரனுக்கு கற்பித்தது. அன்று பிரித்தானியா செய்த மனிதப் படுகொலைகளை இன்று மறந்துவிட்டு பேசுகிறது என்று ஜனாதிபதி மேலும கூட்டிக்காட்டினார். (செ-11)


அரியாலை சனசமூக நிலையம்
ஆசிரியர், நூலகர் தேவை

* அரியாலை சனசமூக நிலையத்தின் முன்பள்ளிக்கும், நூலகத்திற்கும் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
* யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
* ஆசிரியர், முன்பள்ளி டிப்ளோமா முடித்திருத்தல் வேண்டும்.
* நூலகர், க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும் அனுபவம் கருத்திற் கொள்ளப்படும்.
* விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 30-08-2014 (7416)

அரியாலை சனசமூக நிலையம், 134, பூங்கன்குளம் வீதி, அரியாலை



VACANCY

நீங்கள் நிலையானதொரு தொழில் தேடுனரா? நிரந்தரமான பதவி முன்னேற்றத்தினை பெற விரும்புபவரா? செய்யும் தொழிலில் நல்லதொரு வருமானம் பெற விரும்புபவரா? இதோ... பல வருட காலமாக இயங்கிவரும் எமது முன்னணி கம்பனியின் மேலும் புதிய 4 கிளைகளுக்கான 20 புதிய வெற்றிடங்கள்.

+05 Supervisor's
+03 Assistant Manager's
+02 Administration's
+10 Training Manager's

பயிற்சியின் போது 15,000/=
பயிற்சியின் பின் 35,000/= +
தொழில் புரிவோருக்கான தங்குமிடவசதி உண்டு.

அழைக்க:- 0774458134, 0779994807 (C-7422)



கட்டார் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு!



கட்டார் நாட்டில் உள்ள Al Massera முன்னணி நிறுவனத்தில் மரத்தளபாட உற்பத்தி மற்றும் அதனை அழகுபடுத்தும் துறையில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | | |
|---|---|---|
| Carpenters | 15 | 1400+OT |
| Spray painters (Furniture) | 15 | 1400+OT |
| Foreman | 10 | 1900+OT |
| Project Co-ordinator | 05 | 2800+OT |
| Autocad DraftMan | 05 | 2800+OT |
| Project Manager | 02 | 4400+OT |
| Driver (Heavy vehicles) Gulf Licence | 10 | 2000+OT |
| AC Technician (Gulf Experience) | 10 | 2200+OT |
| **Trolly Boy (new Qatar airport)** | 25 | 900+OT+Tip |

தங்குமிடம் மருத்துவம் இலவசம் நாளாந்த வேலை நேரம் 8 மணித்தியாலம். மேலதிக வேலைநேரம் உண்டு. கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்துக்குள் பயணம் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இடங்கள்.

எதிர்வரும் 16.08.2014சனிக்கிழமை காலை 9.00-1.00 மணிவரை Lanka Voice இல. 26/2, புகையிரத நிலைய வீதி, வவுனியா. T.P:-0245615610, 0766697789

எதிர்வரும் 17.08.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00-2.00 மணிவரை Green Grass Hotel வைத்தியசாலை வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P:- 0779527575

உடன் தொடர்பு கொண்டு உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ள

Lanka Voice-Mannar. Vavuniya. 0766697789
Lanka Voice-Jaffna 0779527575

AIR TRUST LL.No.2490
Overseas Manpower Consultant
No.945 1/1 Maradana Road, Colombo-08. (C-8207)



Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்ப

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(C-8202)

Vivekananda Academy
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393



உலகத் தமிழர்களின் உச்ச நிறுவனம்
ரமி இசைத்தட்டின் மாபெரும் மலிவு விற்பனை

ராஜா நகரில் வீற்றிருக்கும் நல்லூர் கந்தசாமி கந்தனின் மஹா உற்சவ திருநாளை முன்னிட்டு சுவிசில் இருந்து மூன்று இடங்களில் முகாமிட்டு நடத்தி வருகிறோம்.

இலங்கையில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் எதிர்பார்க்காத விலையில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம். அனைத்தும் ஒரிஜினல் சிடிக்கள். கம்யூட்டர் பதிவுகள் அல்ல என்பதை மக்கள் அறிய வேண்டும்.

Contact: KANTHAN 0779704753




கொடியேற்றத்திலிருந்து 01.08.2014 மலிவு விற்பனை ஆரம்பம் இதனை தொடர்ந்து துர்க்கை அம்மன் (சப்பறம், தேர், தீர்த்தம்), சன்னதி முருகன் (6ம் நாளிலிருந்து தீர்த்தம் வரை), வல்லிபுரம் ஆழ்வார் (சப்பறம், தேர், தீர்த்தம்) உற்சவ நாட்களிலும் எமது மலிவு விற்பனை.

30 ரூபாயிலிருந்து விலை ஆரம்பம்

விற்பனை நடைபெறும் இடம்: கோவில் வீதி, 231 நல்லூர் யாழ்அருவி (சுவீஸ் மினரல் வாட்டர் கம்பெனி)

விற்பனை நடைபெறும் இடம்: லிங்கம், ரியோ கூல்பார் (நடுவே அமைந்துள்ளது)

(7220)



SYLO ஐஸ் கிறீம் SWEET YOUR LIFE ORBIT

உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல.251C பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.

தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள் ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்

021 492 6003



இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்

SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd
இல.76, அம்மன் கோவில் வீதி
கொக்குவில், கிழக்கு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org